# துரைத்தன விளக்கப் பாடங்கள்

## முதற்பாகம்


**R.** சவரிமுத்து

எழுதியது


துரைத்தனத்தார் அங்கீகரித்தது


மதுரை

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

1929 [விலை அணு 4

(...ரும் பதிப்பு)



TB
O3¹,6
N29
180231



ஐந்தாம் ஜார்ஜ் ம்ஹிபர்

# முகவுரை.

தற்காலம் பள்ளிக்கூடத்தில் பயிலும் மாணவர்கள் தாங்கள் யாரால் ஆளப்படுகிறார்கள் என்றும், அப்படி ஆளுவோர் தங்களுக்கு எவ்விதமான நன்மைகளைச் செய்துவருகிறார்கள் என்றும், தாங்கள் பெறும் நன்மைகளைச்சர்க்கார் எவ்விதமான வரும்படியைக்கொண்டு செய்துவருகிறார்கள் என்றும் அறிவது அவசியமான காரியமென்பதை உணர்ந்துகொள்ளும்பொருட்டு, சர்க்கார் இராஜாங்க முறை அல்லது சிவிக்ஸ் என்ற பாடத்தையும் மாணாக்கர் கற்கவேண்டும் என்று ஏற்படுத்தியுள்ளார்.

ஏனெனில், எலிமெண்டரிப் பாடசாலையில் படித்துச் சாதாரணமாய் 5ம் வகுப்பு வாசித்த பிறகு, தாங்கள் வாழ்வுக்கு வேண்டிய வழிகளைத்தேடுவது அநேக மாணாக்கர்களின் இயல்பு. ஆதலால் அவர்கள் தங்கள்ஜீவியகாலத்தில் சர்க்காருக்குக் கட்டுப்பாடுடையவர்களாயிருக்கிறார்கள் என்றும், ராஜாங்கத்தைச்செம்மையாய் நடத்தச் சர்க்கார் நம்தேசத்தைப் பல பாகங்களாகப்பிரித்து, அவைகளுக்குப் பற்பல அதிகாரிகளை நியமித்து ஆளுகிறார்கள் என்றும், ராஜ்யத்திலுள்ள காரியங்கள் ஒருங்கே நடைபெற அவைகளைப் பல இலாகாக்களாக வகுத்து அவைகளுக்குக் கிரமமாக அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும் அவ்வதிகாரிகளின் அதிகார எல்லை வரம்பும் அவைகள் ஏற்படுவதின் அவசியமும் ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது உசிதமல்லவா?

ஆகையினால் அந்த இலாகாக்களில் முக்கியமானவைகளில் சிலவற்றைப்பற்றிக் கீழ்வகுப்பில் கற்றுவரும் மாணாக்கர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டிய விஷயத்தை அவர்கள் சந்தோஷத்துடன் கதை ரூபமாய் வாசித்து அறியும்படி இப்புத்தகத்தைச்சம்பாஷணை நடையாக எழுதினேன். இப்புத்தகம் ஐந்தாம் வகுப்பிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு Supplementary Reader புத்தகமாக உபயோகிக்கலாம்.

நான் இத்புத்தகம் எழுதின கருத்து செவ்வையாய் நிறைவேறவும், இப்புத்தகம் மாணாக்கர்களுக்குப் பயன் தந்து உதவும்படியாகவும் கருதும் நண்பர்கள் இப்புத்தகத்தில் காணப்படும் குறைவுகளை எனக்குத் தெரிவித்தால் அவைகளை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பில் நிவர்த்திப்பேன்.

**R. S.**

# பொருளடக்கம்


| எண் | விஷயம். | பக்கம் |
|---|---|---|
| 1. | நகர பரிபாலனம் (முனிசிபாலிட்டி) | 1 |
| 2. | தபால் இலாகா (தபால்) | 8 |
| 3. | ஷை (பார்சல் முதலியன) | 14 |
| 4. | ஷை (பாக்கெட் முதலியன) | 19 |
| 5. | ஷை (வி. பி. போஸ்டு) | 23 |
| 6. | ஷை (மணியார்டர்) | 28 |
| 7. | ஷை (அதிகாரிகள்) | 34 |
| 8. | போலீஸ் இலாகா (ஊர்காவல்) | 39 |
| 9. | ஷை (ரிசர்வ் போலீஸ்) | 46 |
| 10. | ஷை (உத்தியோகஸ்தர்கள்) | 49 |
| 11. | கிரிமினல் நியாய விசாரணை இலாகா | 52 |
| 12. | சிவில் வழக்கு | 59 |
| 13. | ஹைகோர்ட்டு | 62 |
| 14. | படிப்பிலாகா | 65 |
| 15. | ஷை (சர்க்கார் உதவி) | 72 |

# துரைத்தன விளக்கப் பாடங்கள்



நகரபரிபாலனம்

## முனிசிபாலிட்டி

மாணிக்கம்:—இரத்தினம்! வந்தனம். உன்னைப் பார்த்து வெகு நாளாகிறதே. உனது வீட்டில் யாவருஞ் சுகந்தானே?

இரத்தினம்:—ஆம் சுகந்தான்.

மாணிக்கம்:—இரத்தினம்! இதோ போகிறவரை எப்பொழுதும் சில ரசீதுப் புஸ்தகங்களுடன் அடிக்கடி தெருக்களில் பார்க்கிறேன். எங்கள் வீட்டிற்கும் சில சமயங்களில் வந்து எங்கள் அப்பாவிடத்தில் ரசீது கொடுத்துப் பணம் வாங்கிப்போகிறதுண்டு. அவர் யார்?

இரத்தினம்:—உனக்குத் தெரியாதா? அவர் தான் பில்கலெக்டர். இந்தப்பட்டணத்திலுள்ள வீடு களில் வரி வாங்குவதற்கு, சில ஆட்களை நிய மித்திருக்கிறார்கள். அவர்களில் இவர் ஒருவர்.

மாணிக்கம்:—இவருக்கு ஏன் வரி கொடுக்கவேண் டும்?

இரத்தினம்:—இவருக்கு நாம் வரிகொடுப்ப தில்லை. இவர் வரிகளை வாங்கி முனிசிபல் ஆபீசுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்.

மாணிக்கம்:—முனிசிபாலிட்டி என்றால் என்ன? எனக்கு விளங்கவில்லை. தயவுசெய்து சொல்ல வேண்டும்.

இரத்தினம்:—நீ எப்போதாவது அந்த ஆபீஸ் பக்கம் போயிருக்கிறாயா?

மாணிக்கம்:—ஆமாம், அடிக்கடி அவ்வழியாய்த் தான் எங்கள் வீட்டிற்குப் போவேன். சில சம யங்களில் சில கனவான்கள் அந்த அறையில்

கூட்டங்கூடி, ஏதோ சில விஷயங்களை பேசிக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் யார்?

இரத்தினம்:—அவர்கள் இந்த ஊரிலுள்ள பெரியோர்கள். நகர ஜனங்களின் பிரதிநிதிகள். மாதம் ஒருமுறை அல்லது அவசரமான சமயங்களில் கூடுவார்கள்.

மாணிக்கம்:—அவர்கள் எதற்காகத் தங்கள் சொந்த வேலைகளை விட்டுவிட்டு இங்கு கூடுகிறார்கள்?

இரத்தினம்:—ஊராருக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிப்பதற்காகவே கூடுகிறார்கள். இவர்களுக்கு முனிசிபல் கவுன்சிலர்கள் என்று பெயர்.

மாணிக்கம்:—இவர்களை யார் நியமிக்கிறது?

இரத்தினம்:—இவர்களில் சில பெயர்களை வரி கொடுக்கும், நகரவாசிகளும், மற்றவர்களைத் துரைத்தனத்தாரும் நியமிக்கிறார்கள்.

மாணிக்கம்:—இந்த அங்கத்தினர்கள் இத்தனை பேர்தானிருக்கவேண்டுமென்கிற நிபந்தனையுமுண்டோ?

இரத்தினம்:—சந்தேகமில்லாமல், பட்டணத்திற்கும், விஸ்தீரணத்திற்கும் தக்கபடி நியமிக்கப்படுகிறார்கள்.

மாணிக்கம்:—இவர்களுக்குச் சம்பளமுண்டோ?

இரத்தினம்:—இல்லை; இல்லை. இவர்களுக்குச் சம்பளமே கிடையாது. நகரத்தின் நன்மைக்காகவே வேலை செய்து வருகிறார்கள்.

மாணிக்கம்:—இவர்களுக்குத் தலைமையா யிருக்கப் பட்டவருக்குப் பெயரென்ன? அவரை யார் நியமனம் செய்கிறது?

இரத்தினம்:—அவருக்குச் சேர்மென் என்று பெயர். அவர் கௌன்சிலர்களால் நியமிக்கப் பட்டு சர்க்காரால் அங்கீகாரமாகிறார்.

மாணிக்கம்:—இந்தச் சங்கத்தாருக்குத்தான் முனிசிபாலிட்டியார் என்று பெயரோ?

இரத்தினம்:—ஆமாம்; இவர்களுக்குத்தான் முனிசிப்பாலிட்டியார் என்று பெயர். இவர்கள் கூடி காரியங்கள் நடத்தும் ஆபீஸ்தான் முனிசிபல் ஆபீஸ் எனப்படும்.

மாணிக்கம்:—இவர்கள் நகரத்தின் நன்மைக்காகவே வேலை செய்து வருகிறார்கள் என்று சொன்னீர்களே, என்ன நன்மை செய்துவருகிறார்கள்?

இரத்தினம்:—நீ எப்பொழுதாவது கிராமாந்திரம் போனதுண்டா?

மாணிக்கம்:—ஆமாம் போயிருக்கிறேன்.

இரத்தினம்:—அங்கே இருக்கும் ஜனங்களுக்கு இங்கிருக்கும் ஜனங்களைவிட என்னென்ன வசதிக்குறைவுகளுண்டு?

மாணிக்கம்:—அவர்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவோ வித்தியாசம். கிராமத்தில் சாயந்திரம் 6 மணி ஆனால் தெருக்களில் இருட்டாயிருப்பதால் வெளியே ஜனங்கள் அதிகமாய் நடமாட்டம் இல்லை. அவர்களுக்கு நகரவாசிகளுக்குக் கிடைப்பதுபோல் சுத்தமான ஜலம் எப்பொழுதும் கிடைப்பதில்லை. தெருக்கள் சுத்தமாயிருப்பதில்லை. ஜனங்களுக்கு வியாதி வந்தால் அவர்களுக்குச் சிகிச்சை செய்து கொள்வதற்குத் தரும ஆஸ்பத்ரி கிடையாது. இவ்வளவு நன்மைகளை நகரவாசிகள் தான் அநுபவித்து வருகிறார்கள்.

இரத்தினம்:—மாணிக்கம்! முனிசிபாலிட்டியார் செய்கிற நன்மைகள் நீ சொன்ன நன்மைகள் மாத்திரமல்ல. இவர்கள் இன்னும் அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தித் தாங்களே நடத்துவதுடன், பிரைவேட் மானேஜ்மெண்டுப் பள்ளிக்கூடங்களுக்கும் திரவிய சகாயம் செய்துவருகிறார்கள். தெருக்களைச் சுத்தம் பண்ணுவதற்கும், குப்பைகளை அப்புறப்படுத்தவும், தொத்து வியாதி நகரத்திலுள்ளவர்களைப்

பிடித்து உபாதிக்காதபடி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்துவருகிறார்கள்.

மாணிக்கம்:—இவ்வளவு காரியங்களை நடத்துவதற்கு அநேகஞ் சிப்பந்திகள் வேண்டுமல்லவா? அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமே? பணத்திற்கு என்ன செய்வார்கள்?

இரத்தினம்:—சந்தேகமில்லாமல் பணந்தான் வேண்டும். பணமில்லாமல் ஒரு காரியமும் நடவாது. அதற்குத்தான் அப்போது நீ பார்த்த மனிதன் உங்கள் வீட்டிலும் மற்றுமுள்ள வீடுகளிலும் போய் வரிவாங்கி வருகிறார்.

மாணிக்கம்:—அவர் ஒவ்வொரு வீட்டிலும் வாங்கும் வரி சொற்பந்தானே. அதைக்கொண்டு இவ்வளவு காரியங்களை எப்படி நடத்திவருகிறார்கள்?

இரத்தினம்:—உண்மைதான். அவர் சில வரிகள்தான் வாங்குவார். ஆயினும் "பல துளி பெருவெள்ளம்" என்பதுபோல இவ்வூரிலுள்ள வீடுகள் ஒவ்வொன்றிலும் வாங்கினால் அதிகத் தொகையாகுமல்லவா?

மாணிக்கம்:—நல்லது, அவர் சில வரிகள் வாங்குவதாச் சொன்னீர்களே, அவர் என்னென்ன வரி வாங்குகிறார்?

இரத்தினம்:—அவர் வீட்டுவரி, தண்ணீர் வரி, கக்கூஸ் வரி என சில வரிகள் வாங்குகிருர்.

மாணிக்கம்:—இதுவுமல்லாமல் வேறு வரி உண்டோ?

இரத்தினம்:—ஆமாம் உண்டு. ரோடுகளைச் செப்பனிடவும்புதிய ரோடுகள் அவசியமாயிருந்தால் புதிய ரோடுகள் போடவும், நகரத்திற்குள் பாலம் முதலியவை கட்டவேண்டியிருந்தால் கட்டவும் வேண்டுமல்லவா? அதற்காகவும், மற்றும் செலவுக்காகவும் சுங்கவரி, எருது, நாய் வளர்த்தால் அவற்றின் வரி, பலவித வண்டிவரி, தொழில்வரி எனப் பலவித வரி வாங்குகிருர்கள்.

மாணிக்கம்:—நான் முதலில் வீணுக அந்தப் பில் கலெக்டரிடம் என் அப்பா பணம் கொடுக்கிருர் என்று நினைத்திருந்தேன். சொற்ப பணம் கொடுத்து அதிக நன்மை பெற்றுவருவது எனக்குத் தெரியாதிருந்தது. இப்போது இந்த முனிசிபாலிட்டியார் செய்கிற நன்மைகளையும் அவர்களுக்கு வரி கொடுக்கும் அவசியத்தையும் அறிந்துகொண்டேன். தங்களை இவ்வளவு நேரம் நிறுத்தினதைப் பற்றி என்னை மன்னிக்கவும்.

இரத்தினம்:—இப்பொழுது நேரம் ஆகிவிட்டது. அடுத்தமுறை சந்திக்கும்பொழுது மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொள்வோம். போய் வா.

மாணிக்கம்:—வந்தனம்! வந்தனம்!

---



தபால்.

தபால்காரர் கடிதம் கொண்டுவருதல்.

ஜெகம் தன் தாயாரைக் கூப்பிடுதல்.

ஜெகம்:—அம்மா! அம்மா!! இதோ தபால்காரர் நிற்கிறார்; கடிதம் வந்திருக்கிறதாம்.

தாய்:—(கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சந்தோஷப்படல்)

ஜெகம்:—அம்மா! என்ன சந்தோஷப்படுகிறீர்கள்? என்ன காரணம்? இன்னும் தபால்கூட்டைத் திறக்கவில்லையே.

தாய்:—ஜெகம்! கூட்டைத் திறக்கவில்லை. உண்மைதான். ஆனல் இக்கடிதம் சென்னையிலிருக்கும் உன் அப்பாவிடமிருந்து வந்திருக்கிறது. அதனல் தான் சந்தோஷப்படுகிறேன்.

ஜெகம்:—அம்மா! இக்கடிதம் சென்னையிலிருந்து வந்ததென்பது எப்படித் தெரியும்?

தாய்:—இதோ பார். முன் பக்கத்து தலைச்சீட்டின் மேல் முத்திரை அடித்து இருக்கிறது. இக்கடிதத்தை எந்தத் தபால் ஆபீசில் போட்டார்களோ, அந்த ஆபீசின் பெயரை இந்தத் தலைச் சீட்டின் மேல் முத்திரை பதித்திருக்கிறது. அதுமாத்திரமல்ல. எத்தனை மணிக்கு இந்தக் கடிதம் எடுக்கப்பட்டதென்று அந்த மணியும் தேதியும் இந்த முத்திரையில் கண்டிருக்கின்றன.

ஜெகம்:—இந்தத் தலைச்சீட்டு அழகாயிருக்கிறதே. இதில் ஏன் அந்த முத்திரையைப் பதித்தார்கள். கொஞ்சம் விலகிப் பதிக்கக்கூடாதா?

தாய்:—அப்பா! நீ சொல்வது சரிதான். அது அழகாய்த்தானிருக்கிறது. இந்தத் தலைச்சீட்டுத்தான் இக்கடிதம்கொண்டுவருவதற்கு நாம் கொடுக்கும் கூலி. இதன் கிரயம் ஓர் அணைத் தான். இதன் மேல் முத்திரையை அடிக்கா விட்டால் மறுபடியும் இந்தத் தலைச்சீட்டை எடுத்துஉபயோகிப்பார்கள். வேறொரு காகிதம் எழுதியனுப்பவேண்டுமானால், வேறே தலைச் சீட்டு வாங்கி ஒட்டவேண்டும்.

ஜெகம்:—அம்மா! இதோ பின்பக்கம் இன்னொரு முத்திரையும்அடித்திருக்கிறார்களே,இதென்ன முத்திரை?

தாய்:—இக்கடிதம், எந்த ஊருக்குப்போய்ச்சேர்ந் ததோ அந்த ஊர் தபால் முத்திரை. முன் பக் கத்திலுள்ள முத்திரையைப் போலவே, இதி லும் கடிதம் வந்து சேர்ந்த ஊரும் மணியும் தேதியும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஜெகம்:—சென்னையிலிருக்கும் நமது அப்பா விற்கு, சங்கதி அனுப்புவது எவ்வளவு சுலப மாயிருக்கிறது! அவரைக்கண்டு நேரில் பேசா விட்டாலும், நாம் ஒரு அணா செலவழித்து ஒரு கடிதம் எழுதி நாம் சொல்லவேண்டிய விஷயங்களை தெரிவித்துவிடலாமே. நாம் போய் கண்டு பேசுவதாயிருந்தாலும், எவ்வள வோசெலவுபிடிக்கும். அம்மா! ஓர் அணையை

விட குறைந்த செலவில் நமது அப்பாவிற்கு சங்கதி தெரிவிக்கக்கூடாதா?

தாய்:—மகனே! கூடாமலென்ன. சங்கதிகள் சொற்பமாயும், விசேஷமானதல்லாததாயும் இருந்தால், அரையணுவிற்கு ஒரு தபால்கார்டு வாங்கி எழுதியனுப்பலாம். இந்தக் கார்டிலும் இன்னொருவித முண்டு. அதாவது:-தபாலா பீஸ் இல்லாத இடங்களுக்குக் கார்டு அனுப்பினுல். அவர்கள் நமது கார்டை பெற்றுக் கொண்டு, உடனே பதில் எழுதுவதற்கு தபால் கார்டோ அல்லது தலைச்சீட்டோ கிடைப்பது கஷ்டமாதலால், நாமே இரட்டைக் கார்டு வாங்கி, முன் பக்கத்திலுள்ள ஒரு கார்டில் சங்கதிகளை எழுதி, அவர்களின் விலாசத்தை அக் கார்டின் முன் பக்கத்தில் வரையவேண்டும். பிறகு மற்ருெரு கார்டின் முன் பக்கத்தில், நமது விலாசம் எழுதி தபாலில் போட்டால், அவர்கள் அதை பெற்றுக்கொண்டு நமக்கு உடனே அந்தக்கார்டில் பதில் எழுதி அனுப்புவார்கள், ஆனுல் இக்கார்டின் விலை ஒரு அணுவாகும்.

ஜெகம்:—ஏன் அம்மா! சங்கதிகள் அதிகமாயிருந்தால் ஓர் பெரிய அட்டையை எடுத்து, நமக்கு வேண்டிய அளவு கத்தரித்து அதில் நிறைய சங்கதிகள் எழுதினுலென்ன? ஏன் ஒரு அணு

விற்கு தலைச்சீட்டுவாங்கித் தபால் கூட்டில் ஒட்டவேண்டும்? கார்டுக்கு கூலி அரையணுத் தானே!

தாய்:—அப்படியல்ல. சர்க்கார் அக்கார்டுகளுக்கு ஒரு அளவு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது $5\frac{1}{2}$ அங்குல நீளத்திற்கும் $3\frac{1}{2}$ அங்குல அகலத்திற்கும் அதிகப்படாமல் இருக்கவேண்டும். அக்கார்டின் முன் பக்கத்தில் வலது பக்கத்தில் அரையணு தலைச்சீட்டு வாங்கி ஒட்டவேண்டும்.

ஜெகம்:—சரி. நாம் சங்கதிகள் அதிகமாய் எழுதி இன்னும் வேறு கடிதங்களும் சேர்த்து தபால் கூட்டுல்வைத்து அனுப்பிவிடலாமே: அப்படிச்செய்யாமல், தாங்கள் கடிதம் எழுதினவுடன் அக்கடிதத்தை தபால்கூட்டில் அடைத்து பிறகு நிறுத்துப் பார்க்கிறீர்களே!

தாய்:—ஜெகம்! நீ நன்றாய்க் கவனித்திருக்கிறாய். அப்படி அதிக கடிதங்களை எழுதி ஒரே கூட்டில் வைத்து அனுப்பக்கூடாது. சர்க்கார், கடிதங்கள் அனுப்புவதிலும் ஒரு திட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். தபால் கார்டுகளுக்கோ, அல்லது கூடுகளுக்கோ அவை செல்லும் தூரத்தைக் கணக்கிட்டு தபாற்கூலி ஏற்படுத்த

வில்லை. அவைகளின் நிறைக்கே தபாற்கூலி. ஆகையால், நாம் அவர்கள் குறித்த நிறைக்கு ஏற்றபடியே தலைச்சீட்டு ஒட்டவேண்டும். அந்த அளவைச் சொல்லுகிறேன் கேள்.

தபாற் கூடு:—அதாவது, உள்ளேயிருக்கும் சங்கதி என்னவென்று பிறர் அறியாதபடி அடைத்திருக்கும் கடிதங்கள், $2\frac{1}{2}$ தோலா அல்லது $2\frac{1}{2}$ ரூ. எடைக்கு உட்பட்டிருந்தால் 1 அணு தலைச்சீட்டும், $2\frac{1}{2}$ தோலாவிற்கு மேற்பட்டு ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவிற்கும் அதன் பாகங்களுக்கும் தனித்தனியே, ஒரு அணு தலைச் சீட்டும் ஒட்டவேண்டும். இக்கணக்குப் பிரகாரம் குறைவாகவோ, அல்லது முழுதும் தலைச்சீட்டு ஒட்டாமலோ, தபாலில் அனுப்பிவிட்டால் இரட்டிப்பாகக் கடிதம் பெற்றுக்கொள்பவரிடம் வசூல் செய்வார்கள்.

ஜெகம்:—அம்மா! அக்கடிதத்தை உடைத்து வாசியுங்கள்.

தாய்:—(கடிதத்தை வாசித்துவிட்டு) ஜெகம் உனக்கு உன் அப்பா, சட்டையும், வேஷ்டியும், நமக்குச் செலவிற்கு ரூபாய் 20ம் தபால் வழியாய் அனுப்புவதாக எழுதியிருக்கிருர்கள். அவைகள் நாளைக்கு வரலாம்.



## தபால்

பார்சல், ரிஜிஸ்டர், இன்ஸ்யூரன்ஸ் முதலியன.

தாய்:—அப்பா ஜெகம்! நேற்று நான் கடிதத்தில் வாசித்தபடியே உனக்குச் சட்டையும், வேஷ்டியும் வந்துவிட்டது. இன்னும் நமக்குச் செலவிற்கு பணம் வரவில்லை.

ஜெகம்:—மெத்த சந்தோஷம். என்னிடம் கொடுங்கள் நான் பார்க்கட்டும்.

தாய்:—ஜெகம்! நான் நேற்று சொன்னபடியே இதற்கும் தபாற்கூலி தலைச்சீட்டாக ஒட்டியிருப்பதைக் கவனி.

ஜெகம்:—ஆம். அம்மா! இந்தத் தலைச்சீட்டை மறுபடியும் உபயோகப்படுத்தாதபடி அதன் மேல் அவ்விடத்து முத்திரையும் பதித்திருக்கிறார்கள். இச்சிப்பங்களுக்கும் கடிதங்களைப் போலத் தான் தபாற்கூலி ஒட்டவேண்டுமோ?

தாய்:—இல்லை! தபாற் கடிதங்களைப்போல் தலைச்சீட்டு ஒட்டவேண்டுமானால், தபால் மூலமாய்ச் சாமான் தருவிப்பது அதிகச் செலவாகும். அதற்காக சர்க்கார் இதைப்போன்ற சிப்பங்கள், சிறு மூட்டைகளான பார்சல்களுக்கு தபாற் கட்டணம வேறுவிதமாகவைத்திருக்கிறார்கள். அதன் விபரம் யாதெனில்:—முதல் 20தோலாவிற்கு அல்லது அதன் பாகத்திற்கு அணா 2-ம், 40 தோலாவிற்கு அணா 3-ம், இப்படி 440 தோலா வரையில் ஒவ்வொரு 40 தோலாவிற்கும் அதன் பாகத்திற்கும் அணா 3-ம், இதற்கு மேற்பட்டு 800 தோலா வரையில், ஒவ்வொரு 40 தோலாவிற்தும் அதன் பாகத்திற்கும் அணா 4 வீதம் கட்டவேண்டும். 440 தோலாவிற்கு மேற்பட்ட பார்சல்களை அவசியம் ரிஜிஸ்டர் செய்யவேண்டும்.

ஜெகம்:—அம்மா நாம் யாருக்காவது சாமான் அனுப்பவேண்டுமானால் எப்படி பார்சல் செய்வது?

**தாய்:**—துணியைப் போன்ற சாமான்களாயிருந்தால் சாதாரணமாய், ஓர் கெட்டித்துணியால் உள்ளே இருக்கும் சாமான் வெளியே தெரியாமல், சுற்றித்தைத்து, அத்தையல்களின் மேல் நமக்குச் சொந்தமான முத்திரையை அரக்கினுல், பதிக்கவேண்டும். பிறகு, நாம் யாருக்கு அனுப்புகிறேமோ அவருடைய பெயரும் விலாசமும் எழுதி, பெற்றுக்கொள்பவர் அவ்விடமில்லாத பக்ஷத்தில், நம்முடைய சாமான் நமக்குத்திரும்பிவந்துசேர, பார்சலின் இடது பக்கத்து மூலேயில் நமது விலாசமும் தெளிவாய் எழுதவேண்டும். அந்தப் பார்சலே ரிஜிஸ்டர் செய்வதாயிருந்தால் ரிஜிஸ்டர் பார்சல் என்றும், ரிஜிஸ்டர் செய்யாதிருந்தால் அன் ரிஜிஸ்டர்பார்சல் என்றும் தலேப்பில் எழுதவேண்டும். அதன் பிறகு அந்தப் பார்சல் எடைப்படி தபால்கூலியும் ஸ்டாம்பாக ஒட்டவேண்டும். ரிஜிஸ்டர் செய்வதாயிருந்தால், என்ன எடையிருந்தாலும் அதற்குப் பிரத்தியேகமாக 2 அணு ஸ்டாம்பு ஒட்டி, தபால் ஆபீஸில் கொண்டுபோய், அதற்காக ஏற்பட்ட குமாஸ்தாவிடம் கொடுக்கவேண்டும். கார்டானுலும், கடிதமானுலும், எவ்வளவு எடையுள்ள பார்சலானுலும் ரிஜிஸ்டர் செய்தால், யாரிடம்

போய்ச் சேரவேண்டுமோ, அவரிடம் பத்திர மாய்ப் போய்ச்சேரும்.

ஜெகம் :—கடியாரங்கள், நகைகள் போன்ற சாமான்களை அனுப்புவதாயிருந்தால், துணி யைச் சுற்றி, தாங்கள் சொல்லியதுபோல் தைத்து முத்திரை பதித்து அனுப்பினல் சேதம் உண்டாகாதா ?

தாய் :—ஆம் சேதம் உண்டாகும். அவைகளை அனுப்பும் முறை வேறு. அவைகளுக்கு ஏற்ற சிறு பெட்டி செய்து அந்த சாமான் அப்பெட்டியில் மோதிச் சேதம் உண்டாகத் படி அந்தச் சாமான்களைச் சுற்றிலும் பஞ்சோ, அல்லது மிருதுவான ஏதாவது வேரு பொரு ளோ வைத்து, நன்ருய் பெட்டியை மூடி, மேலே காகிதமாவது, துணியாவது சுற்றி முன் சொல்லியது போல் முத்திரை வைத்து, எடைப்பிரகாரம் தபாற்கூலி ஒட்டி, தபால் ஆபீஸுக்கு கொண்டுபோய் சேர்க்கவேண் டும். ரிஜிஸ்டர் செய்தால் நமக்கு ஓர் ரசீது கொடுப்பார்கள்.

ஜெகம் :—நகை அனுப்புவது தவறிவிட்டால் என்ன செய்வது ? நமக்கு நஷ்டந்தானே.

தாய் :—இல்லை, இல்லை. அதைப்பற்றி பயப்பட வேண்டியதில்லை. சாமான் தவறி விடாதபடி நாம் அதை தபாலாபீஸில் இன்ஷ்யூரன்ஸ்

செய்து விடலாம். அப்படி இன்ஸ்யூரன்ஸ் செய்வதற்கு எடையின் மேல் கணக்கில்லே. தூரத்தை உத்தேசித்தும்கணக்கில்லே. ஆனல் அந்த சாமான் பெறுமதியின்மேல்தான் அதற்குத் தபாற்கூலி. அதாவது 100 ரூபாய்க்குட்பட்ட தொகை பெறுமான பார்சல்கள் அல்லது கரன்ஸி நோட்டுகள் முதலானவைகளுக்கு 2 அணுவும் 100 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை மதிப்புள்ளதாயிருந்தால் ஒவ்வொரு நூறு அல்லது அதன் பாகத்திற்கு 2 அணு சேர்த்தும் தபால், தலேச்சீட்டாக ஒட்டவேண்டும். அப்படி நாம் இன்ஸ்யூரன்ஸ் செய்து அனுப்பின சாமான் தவறிவிட்டால், அதன் விலேயை அல்லது மதிப்பை, எவ்வளவிற்கு இன்ஸ்யூரன்ஸ் செய்தோமே அத்தொகையை நமக்குத் தபால் ஆபீசில் கொடுத்து விடுவார்கள்

இன்ஸ்யூரன்ஸ் செய்யப்படும் பார்சல்களுக்குத் தபால் முறைப்படி அதற்கு ஏற்பட்ட தபாற்கூலியும், ரிஜிஸ்டர் செய்வதற்கு அணு 2-ம் இன்ஸ்யூரன்ஸ் செய்வதற்கு அதன்மதிப்புப்படி ஏற்பட்ட இன்ஸ்யூரன்ஸ்கூலியும், தபால்தலேச்சீட்டாக அந்த பார்சல்மேல் ஒட்டவேண்டும். பிறகு அந்த பார்சல் தலேப்பில் இன்ஸ்யூரன்ஸ்

பார்சல் என்று எழுதி, பார்சல் அனுப்புவதற்குச் சொன்ன முறைப்படி எழுதியும், தபால் ஆபீஸுக்கு கொண்டுபோய், அதற்குள்ப்பட்ட குமாஸ்தாவிடம் கொடுக்க வேண்டும். அவர் தன் புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு நம்பரும் ஒட்டி நமக்கு ஓர் ரசீது கொடுப்பார். அந்த ரசீதே நமக்கு ஆதாரம். அனுப்பிய சாமான் தவறுங்காலையில், இந்த ரசீதை தாக்கல்செய்து நமது சாமானுக்காகக் கேட்கலாம். இதோ பார்! இந்தப் பார்சலின் தலைப்பில் ரிஜிஸ்டர் பார்சல் என்று எழுதியிருக்கிறது. அதன் பக்கத்தில் ஓர் துண்டுக்கடிதத்தில் ரிஜிஸ்டர் நம்பர் பதித்திருக்கிறது.

ஜெகம் :—அம்மா! பார்சல், ரிஜிஸ்டர் இன்ஸ்யூரன்ஸ் முதலியவைகளைப்பற்றி எனக்கு நன்ருய் விளங்குகிறது.

---

## தபால் இலாகா

[பாக்கெட், புக்போஸ்ட், அக்னலேஜ்மெண்ட் ரசீது, சர்ட்டிபிகேட் ஆப் போஸ்டிங்]

தாய் :—ஜெகம்! உனது தகப்பனர் இதோ உனக்கு ஓர் புஸ்தகம் தபால் வழியாய் அனுப்பியிருக்கிருர்.

ஜெகம்:—(ஓடிவந்து) அம்மா! அது என்ன புஸ்தகம், எப்படி வந்தது? தபாலில் துணி, நகை

கடியாரம் முதலிய சாமான்களைத்தான் அனுப்ப லாமென்றும், அவைகளை நன்றாய் மூடி முத் திரை வைத்து அனுப்பவேண்டும் என்றும் சொன்னீர்களே, இப்பொழுது இரண்டு பக்க மும் திறந்து மேலே ஒரு காகிதத்தை மாத்தி ரம் சுற்றி விலாசம் எழுதித் தபால் தலைச்சீட்டு ஒட்டி அப்பா அனுப்பியிருக்கிறார்களே, இது சரியா அம்மா?

தாய்:—சரிதான். இது வேறுவிதமான பார்சல், இதைத்தான் புக் போஸ்ட் என்று சொல்லு கிறது. இந்த வழியாய் தபாலில் புஸ்தகங்கள், சமாச்சாரப்பத்திரிகைகள், கையெழுத்துப் பிர திகள் முதலியவற்றை குறைந்த தபால் கூலி யில் அனுப்பலாம். அவைகள் இன்னவை யென்பது விளங்கும்படியாயும், உள்ளேயிருக் கிற பொருள் வெளியே தெரியவேண்டும்.

ஜெகம்:—இதைப்போன்ற பார்சல்களுக்குத் தபாற் கூலி மிகவும் சொற்பம் என்று சொன்னீர்களே? அதன் விபரம் எப்படி?

தாய்:—இதோ உனக்கு வந்திருக்கும் புஸ்தகத் தைத் தூக்கிப் பார். எவ்வளவு கனமிருக்கிறது? ஏறக்குறைய 9 ரூபாய் கனமிருக்கிறதுபோல் தோற்றுகிறது. நான் உனக்கு முன் சொல்லிய

படிபார்சல் வழியாய் அனுப்புகிறதாயிருந்தால் இதற்கு 4 அணுதபால் தலைச்சீட்டு ஒட்டவேண் டுமே. இதில் ஓர் அணுத் தலைச்சீட்டுத் தானே ஒட்டியிருக்கிறது. ஆகையால் இதற்குச் சகாய மான ஏற்பாடு ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்ல வா! அது எப்படி என்றால் ஒவ்வொரு 5 தோ லாவிற்கும் அதற்குக் கீழ்ப்பட்ட எடைக்கும் அரையணு வீதம் 800 தோலா வரையில் அனுப்பலாம். அதற்கு மேற்பட்ட எடை யுள்ளதாயிருந்தால் வேறொரு பாக்கெட்டாகக் கட்டி அனுப்பவேண்டும்.

ஜெகம்:—ஆம் அம்மா, இந்த புஸ்தகம் பெற்றுக் கொண்டது நமது அப்பாவிற்கு எப்படித் தெரியும்?

தாய்:—புஸ்தகம் பெற்றுக்கொண்டது அப்பா விற்குத் தெரிவதற்கு நாம் பெற்றுக்கொண்ட தாகக் கடிதம் எழுதி விடலாம். புஸ்தகம் அனுப்பினால் சில பெயர்கள் பெற்றுக்கொண்டு பதில் அனுப்பமாட்டார்கள். அதற்காக அனுப்புகிறவர் அந்த பாக்கெட்டுக்கு எடைப் படி ஏற்பட்ட தபாற் கூலியில்லாமல், இன்னும் ஓர் அணு பிரத்தியேகமாக தபால் தலைச் சிட்டு ஒட்டி அக்னாலேஜ்மேண்டு ரசீது என்று சொல் லப்பட்ட பாரத்தில் எழுதி அதையும் தபால்

ஆபீஸில் கொடுத்தால், அவர் அதையும் பெற்றுக்கொண்டு தன் பதிவு புஸ்தகத்தில் எழுதிக் கொள்வார். இந்த பாக்கெட் யாரிடம் போய்ச் சேரவேண்டுமோ, அவரிடம் அந்த அக்னுலேஜ்மெண்ட் ரசீதில் கையெழுத்து வாங்கி நமக்குத் திரும்பி வந்து சேரும்படி செய்வார்.

ஜெகம்:—நமது அப்பா, நமக்குக் காகிதமோ, சாமானே ரிஜிஸ்டர் செய்யாமல் தபால் வழியாய் அனுப்புகிறார்; அதுதவறிவிட்டதென்று வைத்துக்கொள்வோம். அவர் அந்தச் சாமான் தவறிப்போனதென்றும், போய்ச்சேரவில்லை என்றும் ஷை சாமான் இந்தத் தேதியில் தான் போஸ்டாபீஸில் கொடுத்தோம் என்றும் தாவாப்பண்ண ஏதாவது மார்க்கம் இருக்கிறதா?

தாய்:—மகனே! நல்ல கேள்வி கேட்டாய். அதற்கும் சொற்பச்செலவில் வழியிருக்கிறது. அது எப்படியெனில் நாம் அனுப்பும் காகிதத்தையோ அல்லது சாமானையோ, போஸ்டாபீஸுக்குக் கொண்டுபோய் அதற்கு எடைப்படி ஏற்பட்ட தபாற்கூலியை ஸ்டாம்பாக ஒட்டி, வேறே பிரத்தியேகமான ஒரு சிறு துண்டுக் காகிதத்தில் நாம் அனுப்பும் சாமான்களின் எண்ணிக்கையையும், கடிதம் அல்லது சாமானின்மேல் கண்டுள்ள விலாசத்தையும் எழுதி,

காலணு தலைச்சீட்டு ஒட்டி ஷை சாமான்களோடு இந்தச் சீட்டையும் கொடுத்தால், அந்தக் காலணு ஸ்டாம்பின் மேல் தபால் முத்திரை பதித்துக்கொடுப்பார்கள். ஷை சாமானை அந்தத்தபால் ஆபீஸில் அத்தேதியில் கொடுக்கப்பட்ட தென்பதற்கு அது அத்தாட்சியாகும். கார்டு, தபால்கூடு, சமாசாரப் பத்திரிகைகள், புஸ்தக பாக்கெட்டுகளுக்கு 3 சாமான்களுக்குக் காலணு தலைச்சீட்டு ஒட்டிய ஒரு அத்தாட்சிப் பத்திரம் போதும். ரிஜிஸ்டர் செய்யாத பார்சல், வி. பி. புத்தகப் பாக்கெட்டுகள் இவைகளுக்கு 6 சாமான்களுக்கு, ஒரு அத்தாட்சிப் பத்திரம் போதும்

---



வி. பி. போஸ்ட்.

பாட்டனார்:—வடிவேல்! சென்ற வாரம் உங்கள் பள்ளிக்கூடத்தில், நன்ருய்ப் படித்துத்

தேர்ந்த பிள்ளைகளை மேல் வகுப்பிற்கு மாற்றினார்களே, உன்னையும் மேல் வகுப்புக்கு மாற்றினார்களா?

வடிவேல்:—ஆம் தேர்ந்துவிட்டேன். இப்பொழுது 5-வது வகுப்பு படிக்கிறேன். ஆனால் இந்த வகுப்பிற்கு வேண்டிய புத்தகங்களில் சில இங்கு கிடைத்தன. மற்றவைகளை மதுரை பி. நா. சி. பிரதர்ஸ் புத்தக ஷாப்பிற்கு எழுதித்தான் வரவழைக்க வேண்டுமாம். ஆகையால், தாங்கள் தயவு செய்து எனக்கு இந்திய சரித்திரப் புத்தகம் ஒன்றும், வித்தியாரத் நாகர ஐந்தாம் பாடப் புத்தகம் ஒன்றும், நான்காவது புத்தகம் ஒன்றும் வரவழைத்துத் தாருங்கள்.

பாட்டனார்:—இங்கு அந்த புத்தகங்கள் அகப்படவில்லை யென்று ஏன் முன்னமே எனக்குத் தெரிவிக்க வில்லை? இத்தனை நாளும் பாடம் எப்படிப் படித்தாய்? அதோ மேஜையின் மேலிருக்கிற தபால் கார்டையும், பேனா மைக்கூடையும் எடுத்துவா. (பாட்டனார் கார்டை எழுதிப் பையனிடமாகக் கொடுத்து) இதைக் கொண்டு போய் தபாலில் போடு. உனக்கு புத்தகங்கள் 4, 5 தினத்தில் வந்துவிடும்.

வடிவேல்:—அவை எப்படி வரும்? நாம் பணம் அனுப்பாமல். அவர்கள் புத்தகம் நமக்கு அனுப்புவார்களா? பணமும் அனுப்புங்கள்.

பாட்டனர்:—வடிவேல்! நான் சொன்னபடி செய். பணம் இப்போது அனுப்பவேண்டிய தில்லை. நாம் புத்தகங்களைப் பெறும்பொழுது பணம் தபாற்காரரிடம் கொடுத்தால் போது மானது.

வடிவேல்:—புத்தகம் அனுப்பினவருக்கு பணம் கொடுக்காமல் தாங்கள் தபால்காரரிடம் கொடுக் கலாமென்று சொல்லுகிறீர்களே ஏன்?

பாட்டனர்:—நாம் தபால்காரரிடம் கொடுக்கும் பணம் அப்புத்தகக்காரரிடம் போய் சேர்ந்து விடும். அது எப்படியெனில், புத்தகம் அல் லது வேறெந்தப் பார்சலாவது அனுப்புகிற வர், அதைப் பெற்றுக் கொள்பவரிடமாக அதன் கிரயத்தையும், அனுப்புவதில்ஏற்பட்ட செலவையும் வசூலிக்கவேண்டுமானல், வி. பி பாரமொன்று தபாலாபீஸில் வாங்கி, அதை முறைப்படி பூர்த்தி செய்யவேண்டும். பிறகு, மேற்படி பார்சலின் மீது பெற்றுக்கொள்ளு பவர் விலாசமும், அனுப்புகிறவர் விலாசமும்

எழுதுவதுடன், பார்சலின் மேல் பக்கத்தில், அனுப்புகிறவருக்குச் செல்லவேண்டிய தொகையை எண்ணாலும், எழுத்தாலும் குறிக்க வேண்டும். எடைப்படி ஏற்பட்ட தபாற்கூலியையும், வசூலிக்கவேண்டிய தொகையின்படி ஏற்பட்ட மணியார்டர் கமிஷனையும், தலைச்சீட்டாக ஒட்டவேண்டும். பிறகு, சாமானையும், அந்த நமூனாவையும் தபாலாபீஸில் கொடுக்க வேண்டும். அதை அவர் வாங்கி மற்றக் கடிதங்களுடன் அனுப்புவார். யாரிடம் சேரவேண்டுமோ, அவ்வூரிலுள்ள தபால்காரர் விலாசதாரிடம், பார்சலைக் கொண்டுபோய் சேர்ப்பித்து, பார்சலின் மீது கண்டுள்ள தொகையை வசூலித்துக்கொண்டு சாமானைக்கொடுத்துவிடுவார். பிறகு மணியார்டர் மூலமாய்ச் சாமான் அனுப்பினவருக்குப் பணம் போய்ச்சேரும்.

இவ்விதமாகவே நமக்கும் புத்தகங்கள் வரும். தபாற்சேவகன் அவைகளைக் கொண்டு வந்ததும், அதன் மேல் எழுதியிருக்கும் தொகையைக் கொடுத்துவிட்டுப் புஸ்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வடிவேல்:—எடைப்படி தபாற்கூலி ஒட்டவேண்டுமென்று சொன்னீர்களே, அதன் விபரம்

தெரியவில்லை. தயவு செய்து எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

பாட்டனார்:—அனுப்பும் சாமான் பார்சல் மாதிரி நன்றாய் மூடி முத்திரை வைத்திருந்தால், பார்சல்களுக்கு எடைப்படி ஏற்பட்டபிரகாரம் தபாற் கூலியும், புக் போஸ்டாயிருந்தால், அவைகளுக்கு ஏற்பட்ட பிரகாரம் தபாற் கூலியும் ஒட்டவேண்டுமென்பதுதான்.

வடிவேல்:—சாமான் பத்திரமாய் போய்ச்சேர வேண்டுமானால் அதை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று, ஜெகம் தாயார் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்ததையும் நான் கேட்டேன். இப்படிப்பட்ட வி. பி. பார்சலையும் ரிஜிஸ்டர் செய்யலாமோ?

பாட்டனார்:—இதையும் ரிஜிஸ்டர் செய்யலாம். அப்படி ரிஜிஸ்டர் செய்தால், ரிஜிஸ்டர் செலவும், தபாற் கூலியும் ஸ்டாம்பாக ஒட்டினால் போதுமானது. சாமான் அனுப்புகிறவருக்குச் செல்லவேண்டிய தொகைக்கு ஏற்பட்ட கமிஷனை தலைச்சீட்டாக ஒட்டவேண்டிய அவசியமில்லை. சாமானைத் தபால் ஆபீஸில் கொடுத்ததும், அவர்கள் ரிஜிஸ்டர் செய்துகொண்டு, அனுப்புகிறவருக்கு ஓர் ரசீது கொடுத்துவிடு

வார்கள். பிறகு சாமான் பெற்றுக்கொள்பவரிட மிருந்து மணியார்டர் கமிஷனையும் அனுப்பி னவருக்குச் செல்லவேண்டிய தொகையையும் வசூல்செய்து தாங்கள் மணியார்டர் கமிஷனை எடுத்துக்கொண்டு, அனுப்பினவருக்குச் செல் லவேண்டிய தொகையை மணியார்டர் மூல மாய்ச் செலுத்திவிடுவார்கள். சரி, நேரமாகின் றது. தபாலில் கட்டு கட்டிவிடுவார்கள். இந்தக் கார்டைக் கொண்டுபோய் தபால் பெட்டியில் போடு.

வடிவேல்:—இதோ, போகிறேன்.



மணியார்டர்

கண்ணன்:—பொன்னு! வெய்யில் கொடூரமாயிருக் கின்றது. உனது குடையை விரித்துப்பிடி.

**பொன்னன்:**—நண்பா! உனக்குக் குடை இல்லையோ? இதோ, என்குடை நிழலில்வா, நாமிருவருமாக வீடுபோய்ச் சேருவோம்.

**கண்ணன்:**—இந்தக்குடை எப்போது வாங்கினாய்? நன்றாய் இருக்கிறதே! இதற்கு வெள்ளைத்துணி உறைபோட்டால், அதிக உஷ்ணமாகத் தெரியமாட்டாது.

**பொன்னன்:**—நல்ல குடைதான். எனது தகப்பனார் எனக்குக்கொடுத்த பணத்திற்கு, என் தாயார் இக்குடையை வாங்கிக்கொடுத்தார்கள்.

**கண்ணன்:**—உன் தகப்பனார் இவ்விடமில்லையே பிறகு எப்படி பணம் கொடுத்தார்?

**பொன்னன்:**—எப்படிக் கொடுத்தாரா? நேற்று எங்கள் வீட்டிற்கும், ஜெகம் வீட்டிற்கும் தபாற்காரன் வந்தது உனக்குத் தெரியாதா?

**கண்ணன்:**—ஆம், தெரியும். ஏதோ நீண்ட ஓர் காகிதத்தைக் கையில் ஏந்திக்கொண்டு, உன் அம்மாவின் பெயரைச் சொல்லி அழைத்தார்.

**பொன்னன்:**—அப்போதுதான், பணம், எங்கள் தகப்பனார் மணியார்டர் பண்ணியிருப்பதாக எங்கள் அம்மாளிடம் ரூபாயைக் கொடுத்து, நீண்டமணியார்டர் நமூனாவில் கையெழுத்து

வாங்கிக்கொண்டு, எங்களுக்கு அந்த நமூனு வின் கீழுள்ள ஓர் பாகத்தைக் கிழித்துக் கொடுத்துவிட்டுப்போனுர்.

கண்ணன்:—பொன்னு? அது எப்படி? உன் தகப்பனுர் 100-மைலுக்கு அப்பால் இருக்கிறுர். பணம் உங்களுக்கு எப்படி வந்தது?

பொன்னன்:—எங்கள் உபாத்தியாயர், அதைப் பற்றி எங்களுக்குவிபரமாய்ச் சொல்லிக்கொடுத்திருக்கிறுர். அதன் பிறகு நன்ருய், எப்படி மணியார்டர் செய்வது என்பது எனக்கும் தெரியவந்தது, உனக்கும் கற்றுக்கொடுக்கிறேன். இதோ பார். என்னிடத்தில் ஓர் மணியார்டர் பாரம் இருக்கிறது. இதை மணியார்டர் நமூனுவென்றும் சொல்லுவதுண்டு. இவ்விதமான நமூனு, தபால் ஆபீசில் காசு கொடாமல் பெறலாம். இந்த நமூனுவின் பின் பக்கத்தில் 5 கோடுகள் அழுத்தமாகப் பதித்திருப்பதைக் கவனித்துப் பார்.

முதல் பிரிவில் நாம் எழுதவேண்டியது ஒன்றுமில்லை.

இரண்டாவது பிரிவில், நாம் அனுப்பும் ருபாயின் தொகையை எழுத்தால் எழுதவேண்டும். மூன்று வரிகள், அதன் கீழே மெல்லிய

தாய்ப் பதித்திருக்கின்றதைப் பார்க்கிறாய் அல்லவா? அதில் யாருக்கு பணம் போய்ச் சேர வேண்டுமோ, அவரின் பெயரும் விலாசமும் எழுதவேண்டும். இந்த இரண்டாவது பிரிவின்கீழ், இடது பக்கத்து மூலையில் மணியார்டர் செய்யும் தேதியும், வல்து பக்கத்துக் கீழ் மூலையில் மணியார்டர் செய்யும் தேதியும், வலது பக்கத்துக் கீழ்மூலையில் மணியார்டர் செய்பவரின் கையெழுத்தும்இருக்கவேண்டும்.

இந்த மூன்றாவது பிரிவில், முதல் மெல்லிய கோட்டில் பணம் பெற்றுக்கொள்பவரின் பெயரும், இரண்டாவது வரியில் மணியார்டர் செய்யப்பட்ட தொகையை எண்ணால் எழுதி அதன் கீழுள்ள 2 வரிகளில் பணம் அனுப்புகிறவரின் பெயரும் விலாசமும் எழுத வேண்டும்.

நான்காவது பிரிவில், இடது பக்கத்து மேல் மூலையில் மணியார்டர் தொகையை எண்ணால் குறித்து வலது பக்கத்து மேல்மூலையில் மணியார்டர் செய்பவரின் பெயரும் குறிக்க வேண்டும். பணம் பெற்றுக்கொள்பவருக்கு ஏதாவது சங்கதி தெரிவிக்கவேண்டியிருந்தால் அதையும் அந்த பிரிவில் எழுதலாம்.

பிறகு நாம் மணியார்டர் செய்வதாக நமூனுவில் குறித்த தொகையையும், அதற்கு ஏற்பட்ட கமிஷனையும் கொண்டுபோய்த் தபாலாபீஸில். போஸ்ட்மாஸ்டர் அல்லது அதற்கு ஏற்பட்ட குமாஸ்தாவிடம் கொடுத்தால், அதை அவர் பெற்றுக்கொண்டு நமக்கு ஓர் ரசீது கொடுப்பார். நாம் அனுப்பின தொகைக்கு அது ஓர் ஆதாரம்.

**கண்ணன்:**—கமிஷனும் கொடுக்கவேண்டுமென்றுயே, அது எதற்கு? கமிஷன் எவ்வளவு கொடுக்கவேண்டும்?

**பொன்னன்:**—என்ன? தூரத்திலுள்ள உன் அண்ணனுக்கு தபால் மார்க்கமல்லாமல் ஆள்வழியாய் பணம் அனுப்புவதாயிருந்தால் நேரிடும் செலவைக் கணக்கிட்டுப்பார்; ரயில் அல்லது வண்டிச் செலவும், பணம் கொண்டுபோகும் ஆளுக்கு சாப்பாட்டுச் செலவும் கூலி முதலியவையும் கொடுத்தல்லவோ ஆள் அனுப்ப வேண்டும். அப்படிக் கொடுத்து அனுப்பினலும் திருடர் பயம் மிகுதியல்லவா? இவ்வளவு செலவும் பயமும் தபால் மார்க்கத்தில் கிடையாது. பணம் கொண்டுபோவதற்கு மாத்திரம் சொற்பச்சிலவு அனுப்புகிறவருக்கு நேரிடும். அதுவும் அனுப்பும்தொகையை அநுசரித்தே

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது எப்படி யெனில்.

10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு இரண்டணா. 25 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு நான்கணா. 25 ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ்வொரு 25 ரூபாய்க்கும் 4 அணா உயர்ந்துகொண்டே போகும். 25 ரூபாய்க்குமேற்பட்டு 10 ரூபாய்க்கு உள்ளிருந்தால் அப்போது 2 அணா. உதாரணமாக, 35 ரூபாய் அனுப்பினால் 6 அணா.

**கண்ணன்:**—எனக்கு மணியார்டர் செய்யும் விதம் நன்றாய் விளங்கிவிட்டது. ஆனால் இன்னும் ஒரு சந்தேகம். அதாவது தூரத்திலுள்ள ஒரு பட்டணத்தில் ஒருவர் இருக்கிறார், அவருக்கு உடனே பணம் பட்டுவாடாவாகவேண்டும், அதற்கு ஏதாவது ஏற்பாடு தபாலாபீஸில் செய்திருக்கிறார்களா ?

**பொன்னன்:**—ஆம். ஆனால் எல்லாத் தபாலாபீஸிலும் அல்ல. தந்தியுள்ள தபாலாபீஸில் மாத்திரம், அவ்வித மணியார்டர் அனுப்புவதாகஏற்றுக்கொள்வார்கள்.இப்படிச்சீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டிய மணியார்டருக்குத் தந்தி மணியார்டர் என்று பெயர்.

தந்தி மணியார்டர் செய்வதாயிருந்தால், சாதாரண மணியார்டர் நமூனு வாங்கி, அதில் முன் சொன்னபடி பூர்த்தி செய்து நமூனுவின் குறுக்கே தந்தி மணியார்டர் என்று எழுத வேண்டும். இந்தத் தந்தி மணியார்டரிலும் இரண்டு விதம் உண்டு. ஒன்று (எக்ஸ் பிரஸ்) அதிசீக்கிரம் போய்ச் சேரவேண்டியது. மற்ெறுன்று (ஆர்டினரி) சாதாரணமான தந்தி மணியார்டர். தந்திமணியார்டர் செய்யும் போதுஎக்ஸ்பிரஸ் அல்லது ஆர்டினரி என்று குறிக்கவேண்டும். இதற்குக் கட்டணம் வேறு விதமானது. சாதாரண மணியார்டருக்குச்செல் லவேண்டிய கமிஷனுடன் வார்த்தைகளை கணக்கிட்டு, தந்தி அடிப்பதற்கு ஏற்பட்ட செலவும் கொடுக்கவேண்டும்.

---

## தபால் இலாகா அதிகாரிகள்

வடிவேல்:—தாத்தா! தாங்கள் அன்று சொன்னபடி நேற்று எனக்கு புத்தகம் வி. பி. தபால் வழியாய்க் கிடைத்தது. அதன் கிரயத்தையும், அதற்கு நேரிட்ட தபால் செலவையும் பெற்றுக்கொண்டு, புத்தகத்தை என்னிடம் கொடுத்துவிட்டுத் தபாற்காரன் போய்விட்டான்.

அன்று தபால் ஆபீஸிற்குச் சென்றபோது, அங்கு அநேகம்பேர் உட்கார்ந்து, வேலைபார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரென்று எனக்கு விலங்கவில்லை. அவர்கள் யாரென்று எனக்கு சொல்வீர்களா?

பாட்டனர்:—வடிவேல்! அங்கு, அவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் வேலையைப் பரபரப்பாய்ச் செய்துகொண்டிருக்கிறதைக் கவனித்தாயே. தபால் ஆபீஸில்கடிதம்போக்குவரத்து மாத்திரம் அல்லவென்பது உனக்குத் தெரியுமே. தபால் ஆபீஸில் வெளியில் ஒருவர் தலைச்சீட்டு விற்றுக்கொண்டிருக்கிறதைக் கவனித்தாயா? அவர் தான் ஸ்டாம்புவெண்டர் என்று சொல்லப்படுவர். ஒரு ஜன்னல் பக்கத்தின் மேல் மணியார்டர் செய்யுமிடம் என்று எழுதியிருக்கிறதே. அங்கு உட்கார்ந்து வேலைபார்க்கும் குமாஸ்தாவுக்கு மணியார்டர் குமாஸ்தாவென்று பெயர். வேறொரு பக்கத்தில் ரிஜிஸ்டர் செய்யுமிடம் என்று எழுதியிருப்பதை நீ பார்த்திருப்பாய். அங்கு உட்கார்ந்து வேலை பார்க்கும் குமாஸ்தாவுக்கு ரிஜிஸ்டர் குமாஸ்தாவென்று பெயர். கடிதம் பார்சல் முதலியவைகளை ரிஜிஸ்டர் செய்பவர் இவர் தான். மற்றொரு பக்கத்தில் தந்தி அடிக்குமிடம் என்று

எழுதியிருக்கிறதே. அங்கு உட்கார்ந்து தந்தி அடிக்கும் குமாஸ்தாவிற்கு, சிக்னலர் என்று பெயர். மற்றொரு பக்கத்தில் சேவிங்ஸ் பாங்க் வேலை நடக்கிறது. இந்த குமாஸ்தாக்களுக்கு அதிகாரியாய் ஓர் பெரிய மேஜைக்கு முன்னால் உட்கார்ந்திருப்பவர் தான் போஸ்ட்மாஸ்டர் அவர் தான் அந்த ஆபீஸ் தலைமையதிகாரி.

வடிவேல்:—தாங்கள் சொல்வதைப்பார்த்தால், பலவிதமான போஸ்டாபீஸ்கள் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் போஸ்டாபீஸ்கள் எவை? அங்கு என்னவேலை செய்கிறார்கள்?

பாட்டனார்:—ஆம், பல ஆபீஸ்கள் இருக்கின்றன. அவைகளாவன:- கிராமங்களில் அநேகமாய் பிராஞ்சு போஸ்டாபீசுகளிருக்கின்றன; அந்த ஆபீஸ் அதிகாரிக்கு பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர் என்று பெயர். இந்த ஆபீஸ்களில் கடிதம், மணியார்டர், பார்சல், அனுப்புதல் முதலிய வேலைகளைப் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டரே செய்துகொள்வார். ஆனால் அந்நிய நாடுகளுக்குப் பார்சல் செய்தல், இன்ஸ்யூரன்ஸ் செய்தல் முதலிய வேலைகள் இங்கு கவனிக்கப்படமாட்டா. இவருக்குக் கீழ், கிராம போஸ்ட்மேன், தபாற்சேவகன் (**Runner**) முதலிய வேலையாட்களிருக்கிறார்கள். 2-வது பட்டணங்களிலும்,

பெரிய கிராமங்களிலும் சப்போஸ்டாபீஸ்கள் உண்டு. அங்கு சகல தபால்களும், தந்தி, பார்சல், இன்ஸ்யூரன்ஸ் ஆகிய எல்லாத் தபால் வேலைகளும் நடத்தப்படும்.

இவ்விடங்களில் சேவிங்ஸ் பாங்க் வேலையும் நடக்கும். இந்த ஆபீஸ் தலைமையதிகாரிக்கு சப்போஸ்ட்மாஸ்டர் என்று பெயர். பட்டணத்தின் விஸ்தீரணத்திற்குத் தகுந்தாற்போல்,பல சப் ஆபீஸ்களும் ஒரே பட்டணத்தில் பல இடங்களில் இருப்பதுண்டு. ஆனால்இவ்விடங்களில் தபால் வேலைகள் யாவும் நடைபெற்றாலும், (டெலிவரி) பட்டுவாடா செய்யப்படமாட்டாது. ஹெட் ஆபீஸிலிருந்தே பட்டணத்திற்கு,கடிதம், பார்சல்முதலியவை பட்டுவாடா செய்யப்படும்.

ஜில்லாவின் தலைமைப்பட்டணம் அல்லது பெரிய பட்டணங்களில் ஹெட் ஆபீஸ் என்று, ஒரு பெரிய தபால் ஆபீஸ் இருக்கும். அதற்குத் தலைமையதிகாரி ஹெட் போஸ்ட்மாஸ்டர் என்பவராவர். இங்கு தபால் சம்பந்தமான சகல வேலைகளும் தந்தி முதலியவையும் நடைபெறும். இந்த ஹெட் போஸ்ட்மாஸ்டர், தனக்குக் கீழ்ப்பட்ட பிராஞ்சு ஆபீஸ், சப்

போஸ்டாபீஸ் கணக்குகளை தணிக்கைசெய்து தன் கணக்குகளோடு அவைகளைச் சேர்த்து மேல் அதிகாரிக்கு அனுப்புவார்.

மாகாணத்தின் தலைமைப் பட்டணத்தில் இருக்கும் ஹெட் போஸ்டாபீஸுக்கு, ஜெனரல் போஸ்டாபீஸ் என்றுபெயர். அந்தபோஸ்டாபீஸ் தலைமையதிகாரிக்கு பிரஸிடென்ஸி போஸ்ட்மாஸ்டர் என்று பெயர். இவர் தனக்குக் கீழ்ப்பட்ட ஆபீஸ் கணக்குகளைத் தணிக்கை செய்து அக்கௌண்டண்டு ஜெனரலுக்கு அனுப்பவேண்டும். இவருக்கு உதவியாக ஒரு சூப்பிரன்டெண்டும் ஓர் டெப்யூடி போஸ்மாஸ்ட்டரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஹெட் போஸ்ட் மாஸ்டருக்கு மேலதிகாரியாக போஸ்ட்டல் சூப்பிரன்டெண்டுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக, இன்ஸ்பெக்டர்களையும் நியமித்திருக்கிறார்கள்.

———



## போலீஸ் இலாகா

### ஊர்காவல்.

ஜெகம்:—அம்மா! இதோ பாருங்கள். இரு சேவகர் ஒரு மனிதனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறார்கள். பாவம்! ஏன் அப்படி செய்கிறார்கள்?

தாய்:—அவன் ஏதாவது தப்பிதம் செய்திருப்பான். அதோ, உன் மாமா ராமானுஜம் அவர்கள்கூட வருகிறான். அவனை விசாரித்தால் நன்றாய் விளங்கும்.

(ராமானுஜம் சமீபத்தில் வருகிறான்) தம்பி ராமானுஜம்! என்ன சங்கதி? ஏன் இவனைப்

போலீஸ்காரர் பிடித்திழுத்துக்கொண்டு போகி ருர்கள்?

இராமானுஜம்:—அக்காள்! உங்களுக்கு இந்த விஷயம் தெரியவராதா? இவன் கடைத்தெரு வில், காசுக்கடையில், ராமையா செட்டியாரிட மாக ஓர் தங்க அட்டியலேயும், இன்னும் சில விலேயுயர்ந்த நகைகளேயும் இரகசியமாக விற்க வந்தான். ராமையா செட்டியார் வெகு யோக் கியரென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷய மல்லவா? அவர் உடனே, இவன்மேல் சந் தேகப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆள் அனுப்பி, சங்கதியைத் தெரிவித்தார். உடனே இரு போலீஸ் சேவகர்கள் வந்து இவனேப் பிடித்து, நகைகளுடன் போலீஸ் ஸ்டேஷ் னுக்கு கொண்டுபோகிருர்கள்.

ஜேகம்:—ஆம்; அம்மா. இவன் நகை விற்க வந் தால் இவன் மேல் சந்தேகப்படுவானேன்?

இராமானுஜம்:—ஏனென்ருல் இந்த நகைகள், அடுத்த தெருவில் திருட்டுப்போய் ஒரு வார மாயிற்ரும். அவர்கள் இன்னின்ன நகைகள் திருட்டுப்போயின என்று, அன்று தானே அந்த போலீஸ் ஸ்டேஷனில் எழுதி வைத் தார்கள். அது முதல் போலீஸார் வெகு உஜா

ராக இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இரகசியமாய்விசாரித்து வந்தார்கள். இவனைப் பார்த்தால்,பரம ஏழையென்று தோன்றுகிறது. இவனுக்கு ஏது இவ்வளவு விலையுயர்ந்த நகைகள்? அதனால், ராமையா செட்டியார் இவன் மேல் சந்தேகப்பட்டார். போலீஸார் வந்து நகையைப் பார்த்ததும் முன் எழுதிவைத்திருந்த நகைகளாகவே யிருந்தபடியால் இவனைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்.

தாய்:—உண்மை தான். இவன் திருடித்தானிருக்க வேண்டும்.

ஜேகம்:—மாமா! இவனைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் என்ன செய்வார்கள்.

இராமானுஜம்:—அங்கே ஓர் ஸ்டேஷன் ஆபீசர் என்று ஒருவர் இருப்பார். அவர் இவனை விசாரணைசெய்து மேலதிகாரிக்கு அதாவதுமாஜிஸ்திரேட்டுக்கு ரிப்போர்ட் செய்வார்.

ஜேகம்:—அவன் "நான் திருடவில்லை. அந்த நகைகள் என்னுடையது" என்று சொன்னால் விட்டுவிடுவார்களா?

இராமானுஜம்:—அப்படிச்சொன்னால் போதுமா? உண்மையாகவே, அந்த நகைகள் அவனுடையது என்பதற்கு சாக்ஷி வேண்டாமா? திரு

டினவன் பேசும்பொழுதே திருடனென்று விளங்கிவிடாதா? திருடினவன் இன்னு னென்று விளங்கினவுடன் அவன் உண்மை யைச் சொல்லாதிருந்தால் அடித்து உண்மை யைக் கேட்பார்கள். அவனும் பயந்து உண் மையைச் சொல்லிவிடுவான். இன்னும் யாரா வது இவனுடன் சேர்ந்திருந்தாலும், அவர் களையும் இவனைக்கொண்டே அறிந்துபிடிப் பார்கள்.

ஜெகம்:—சரிதான் மாமா! போலீஸ் சேவகர்கள் பட்டணங்களில் ரோடுகளின் சந்தின் நடுவில் நின்று கொண்டிருக்கிறார்களே ஏன்?

இராமானுஜம்:—நீ ரோட்டில் அவர்களைக் கவ னித்துப்பார்க்கவில்லை. ரோட்டின் பக்கங்களி லுள்ள ஸ்தம்பங்களில் அல்லது மரங்களில், வண்டிகள் இடது பக்கம் போகவேண்டு மென்று எழுதி, ஓர் பலகை தொங்கவிட்டிருப் பதை நீ பார்த்திருப்பாய். ஏன் அப்படி எழுதித் தொங்கவிட்டிருக்கிறார்கள்? ஜனங்கள் நெருக் கமாயுள்ள இடங்களில், வண்டிக்காரர் தம் பிரி யம்போல் வண்டிகளை விடுவார்களே யானால் ஜனங்களுக்கு மோசம் நேரிடுமே. ஆகையி னால் வண்டிகளைக் கிரமமான பக்கங்களில் ஓட் டிக்கொண்டு போகும்படி செய்யவும், நெருக்க

ளில் அசுசியான காரியங்கள் செய்யாதபடியும், கூட்டங்களில் திருட்டு, கலகம் நடவாதபடியும், கவனித்து வரவும், திசைகெட்டுத் தடுமாறித் திரியும் குழந்தைகளை அவர்களின் வீட்டில் சேர்க்கவும், அல்லது பெற்றோர்களை விசாரித்துக்கொடுக்கவும், எங்கேயாவது ஒரு கட்டிடத்தில் தீப்பற்றிக்கொண்டால் உடனே தங்கள் ஸ்டேஷனுக்குத் தெரிவித்து மற்றும் சேவகரோடு தீயணைக்கும் யந்திரத்தைக்கொண்டு தீயணைக்கச் செய்யவும் இந்த போலீஸ் கான்ஸ்டேபில்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். கடைகளில் வியாபாரிகள் கள்ளத்தராசு, கள்ளப்படிக்கல் வைத்துப் பிறரை மோசம் செய்யாதபடியும் பார்த்து வருகிறார்கள்.

ஜெகம்:—தெருக்களில் கலகம் செய்பவரைப்போலீஸார் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போவார்கள் என்று சொன்னீர்களே? கலகம் செய்பவர் இரண்டு மூன்று ஆட்களாயும், போலீஸ் சேவகனுக்கு அடங்காத ஆட்களாயுமிருந்தால் அந்த ஒரு போலீஸ் சேவகனால் என்ன செய்யமுடியும்?

இராமானுஜம்:—அப்படி நினைக்கவேண்டாம். ஒவ்வொரு போலீஸ் சேவகனிடமும், தன் காக்கிச் சட்டையின் மேல் பையில் கைக்கடியா

ரம் போட்டிருப்பதுபோல் ஓர் சிறு சங்கிலியில் மாட்டிப்போட்டிருக்கிறதைப் பார்த்திருப்பாய். அது ஓர் ஊதி. அதை ஊதினுல் பக்கத்தி லுள்ள போலீஸ் சேவகர்கள் வந்துவிடுவார் கள். அவர்கள் பின்னுல் தொங்கவிட்டிருக்கும் குண்டாந்தடியால் கலகக்காரர்களை அடக்கி போலீஸ்ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விடு வார்கள்.

தாய்:—தம்பி! இராமானுஜம்! பகலில் காவல் காப்பது அவசியந்தான். போலீஸ் சேவகர் இல்லாவிட்டால் அட்டகாஸம் அதிகமாய் விடும். அயோக்கியர்கள், போக்கிரிகள் கை மேலாகிவிடும். இவர்கள் இருப்பதால் மான முடையோருக்குத் தீங்கு நேரிடுவது அருமை யாகிறது. ஆனுல்,இரவில் திருடர் பயம் அதிக மாயிற்றே. அவர்கள் இரவில் ரோடுகளின் சந் திப்பில் நிற்பதைக்காணேமே ஏன்?

இராமானுஜம்:—அக்காள்! தாங்கள் சொல்வது வாஸ்தவந்தான். ஆனுல் இரவில் வண்டிகள், ஜனங்கள் நடமாட்டம் அதிகமாயில்லை. அதற் காகப் போலீஸார் தெருக்களில் இரவில் அதிக நேரம் இருக்கவேண்டிய அவசியமில்லை. இர வில் திருடர் ஒளிந்திருந்து திருடுவார்கள். ஆகையால், போலீஸார், தெருத்தெருவாய்ச்

சென்று ஜனங்களை உஷார்ப்படுத்தி வருகிறார்கள். அதுவுமன்று ஏற்கனவே குற்றவாளியென்று பெயரெடுத்த நபர்கள் தங்கள் வீட்டில் இருக்கிறார்களா என்றும் கவனித்து வருகிறார்கள்.

ஜெகம்:—ரெயில்வே ஸ்டேஷனில் சில போலீஸார் நிற்பதை நானும், அம்மாளும் சென்னைக்குப்போகும்போது கண்டோம். அவர்கள், காக்கி நிறமான சட்டைகள் போட்டிருந்தார்களே. அவர்கள் அங்கு என்ன செய்கிறார்கள். மாமா?

இராமானுஜம்:—தம்பி! நீ சொல்லுவது சரிதான். அவர்களும் போலீஸ்காரர்கள் தான். ரயில்வேக்களில், திருட்டு, கலகம், சண்டை முதலியவைகளும், ரயில் பிரயாணிகளில் சச்சரவும் உண்டாகாதபடி கவனித்து குற்றம் செய்வோரைப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு வருவது அந்த போலீஸார் வேலையாகும். இவர்களுக்குத்தான் ரெயில்வே போலீஸ்காரர் என்று பெயர். இவர்களுக்கும் காக்கி நிறமான சட்டையும், சிவப்புநிறமான தலைப்பாகையும் உண்டு.

ஜெகம்:—போலீஸ் சேவகர்களால் எவ்வளவு நன்மையான காரியங்கள் உண்டாகின்றன.

போலீஸார் நம்முடைய காவலுக்கும், நமது பொருளின் பாதுகாப்பிற்காகவுமே ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் சர்க்கார் அலுவலுக்காக மட்டும் ஏற்பட்டவர்கள் என்று மதிக்கிறார்கள் பலர். போலீஸ்காரர்கள் யாவரும் ஜனங்களின் க்ஷேமத்தின் பொருட்டு நியமிக்கப்பட்டவர்கள் என்பதை உணராமல் சிலர் அவர்களைக் கண்டால் வீணாகப் பயப்படுகிறார்கள். அப்படி நினையாமல், நாமும் போலீஸாருக்கு இணங்கித் துஷ்டர்களை அவர்கள் வசம் ஒப்படைப்போமானால் நமது நாட்டில் அயோக்கியர்கள் தலையெடுக்க மாட்டார்கள். என்று விளங்குகிறது.

---

## போலீஸ் இலாகா

*ரிசர்வ் போலீஸ் பியூனிட்டிவ் போலீஸ்*

ஜெகம்:—மாமா! ஏதாவது ஓர் ஊரில் உள்ள ஜனங்களுக்குள் அதிகக் கலகம் உண்டாகிவிட்டால் சாதாரண போலீஸ் சேவகர்களால் அடக்கமுடியுமா? இவர்கள் ஒவ்வோர் இடத்தில் சொற்பப் பேர்தானே இருக்கிறார்கள்? இவர்கள் அக்கலகத்தை அடக்குவதிலே கருத்தாயிருந்தால் ஊரில் காவல் செய்வது எப்படி?

இராமானுஜம்:—தம்பி! ஜெகம்! பெரிய கலகம் நடக்குமிடங்களில், இந்த போலீஸார் போய் அடக்குவது அசாத்தியம். ஏனெனில், பெரிய கலகங்கள் ஏற்பட்டால் அவை ஒரே நாளில் அடக்கிவிடக்கூடியதல்ல, அக்கலகமும் பல நாள் நீடித்திருக்கும், ஆகையால் அப்படிப் பட்ட இடங்களுக்கு உபயோகப்படும்படியாய் சில போலீஸ் சேவகர்களை ஒவ்வொரு ஜில்லா விலும் பிரத்தியேகமாய் வைத்திருக்கிறார்கள். அந்த ஜில்லாவின் எல்லைக்குள் எங்கு கலகம் நேரிட்டாலும் அதை அச்சேவகர்களைக் கொண்டே அடக்குகிறார்கள். அவர்கள் சாதா ரண போலீஸாரைப்போலில்லாமல் வேறுவித உடை உடுத்தியிருக்கிறார்கள். அவர்கள் காக்கி நிறமான சட்டையும், பச்சை நிறமான தொப் பியும் அணிந்திருக்கிறார்கள். இவர்களைத்தான் ரிசர்வ் போலீஸ் என்று சொல்லுவார்கள்.

தாய்:—அப்படியும் போலீஸாரை வைத்திருக்கி றார்களா? நமது காப்பின் பொருட்டு சர்க்கா ருக்கு எவ்வளவு செலவு! பெரிய கலகங்கள் நடக்குமிடங்களில், கலகம் செய்வோரை யடக் கத் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை உபயோகப் படுத்தத் தெரியவேண்டாமா?

இராமானுஜம்:—சாதாரணமாய் போலீஸாருக்குத் துப்பாக்கிப்பிரயோகம் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யுத்தவீரர்களைப்போல் துப்பாக்கிப் பிரயோகத்தில் அவ்வளவு தேர்ச்சி இவர்களுக்குக் கிடையாது.

ஜெகம்:—தாங்கள் சொல்வது சரிதான், அந்த இடங்களில், கலகங்கள் இன்னும் அடிக்கடி உண்டாகுமானல் ஷி ரிசர்வ் போலீஸாரை அங்கேயே எவ்வளவு காலத்திற்கு வைத்திருப்பார்கள்? வேறிடங்களுக்கு இவர்கள் தேவையாயிருக்கமாட்டார்களா?

இராமானுஜம்:— சந்தேகமில்லாமல் இவர்கள் தேவையாயிருப்பார்கள். கலகங்கள் அடங்காமற்போனல், இவர்கள் மேலதிகாரிகள் உத்திரவு பெற்று, துப்பாக்கியால் சுட்டு பயமுறுத்தலாம். அவ்விதத்திலும் அடங்காமற்போனல், உடனே ரா ணுவத்தின் உதவியால் அடக்கிவிடுவார்கள். ஜனங்களுக்குள் கலகத்தை யுண்டாக்கக்கூடிய எண்ணத்தை மூட்டுகிறவர்களையும், அக்கிரமமாய்க் கலகங்கள் செய்வோரையும் பிடித்துக் காவலில் வைப்பார்கள். அந்த ஊரில் அதிக நாட்களுக்குப் போலீஸார் இருக்கவேண்டுமானல், ரிசர்வ் போலீஸாரில் சில ஆட்களை யெடுத்து, அந்த ஊரில்

காவல்புரியும்படி செய்து, அந்தப் போலீஸா ருக்கு நேரிடும் செலவை அந்த ஊர் ஜனங்க ளிடமிருந்தே வசூல் செய்வார்கள். இவர்களுக் குத்தான் பியூனிட்டிவ் போலீஸ் என்று பெயர். அந்த ஊரில் இனிமேல் கலகம் உண்டாகா தென்று தெரிந்தவுடன் அந்த பியூனிட்டிவ் போலீஸாரையும் அவ்வூரினின்று துரைத்த னத்தார் நீக்கிவிடுவார்கள்.

ஜெகம்:—நாமே நமது பொருளையும், மானத்தை யும் காப்பாற்றவேண்டியிருக்க, சர்க்கார் தாமே நமது நன்மைகளைக் கவனித்துக் காப்பாற்ற எவ்வளவு மேன்மையான வழிகள் செய்திருக் கிறார்கள்.

---

## போலீஸ் இலாகா

### போலீஸ் உத்தியோகஸ்தர்கள்.

ஜெகம்:—இந்த போலீஸ் சேவகர்கள் எல்லோ ரும் தங்கள் வேலையை ஒழுங்காய்ப் பார்த்து வரும்படியும், இவர்களில் இன்னாரின்னார் இந்தஇடத்தில் காவல்புரியவேண்டுமென்றும் உத்திரவு பண்ணுவதற்கு யாராவது இருக்க வேண்டுமே. அப்படி யாரேனும் இருக்கிறார் களா?

இராமாநுஜம்:—மேலதிகாரிகள் இல்லாவிட்டால் வேலை ஒழுங்காய் நடப்பது கூடாத காரியம். ஆகையால் போலீஸ் சேவகர்களுக்கு மேல் அடுத்தபடியாக இருப்பவர்கள் ஹெட்கான்ஸ்டேபில்கள். இவர்களுக்கு அடுத்தபடியாய் மேல் அதிகாரிகளாயிருப்பவர்கள் சப் இன்ஸ்பெக்டர்கள். இவர்கள் அநேகமாய், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனில் பொறுப்புதாரியாய் (ஸ்டேஷன் ஆபீஸர்களாய்) இருப்பார்கள். இவர்களின் கீழ் சில போலீஸ் சேவகர்கள் வேலைபார்த்து வருவார்கள். இந்த ஸப் இன்ஸ்பெக்டர்களையும், போலீஸ் சேவகர்களையும், கண்காணிக்கும்படியாய், இன்ஸ்பெக்டர்கள் சிலர் இருக்கிறார்கள்.

ஓர் தாலூகாவிலுள்ள போலீஸ் ஸ்டேஷனெல்லாம் இவர்கள் பார்வைக்குட்பட்டவை ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் ஜில்லாபோலீஸ் சூப்பிரண்டேண்டுக்கு உட்பட்டவர்கள். இவர் ஏதாவது பகற்கொள்ளை, பெருந்திருட்டு, வீட்டுக்கொள்ளை முதலியவை நடக்குமிடங்களுக்கு நேரில் போய் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வரவேண்டும்.

இந்த சூப்பிரண்டெண்டுகளுக்குத் துணையாக போலீஸ் டிப்யூடி சூப்பிரண்டெண்டுகளுமிருக்கிறார்கள். ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டுகளுக்கு அடுத்த மேலதிகாரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நமது மகாணத்தின் தலைமைப் பட்டணமாகிய, சென்னைக்கு, பிரத்தியேகமாய், ஜில்லா சூப்பிரண்டெண்டுக்கு மேல், அஸிஸ்டெண்டு கமிஷனர், டிப்யூடி கமிஷனர், கமிஷனர் முதலானவர்களையும் நியமித்திருக்கிறார்கள். இவர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குக் கீழ்பட்டவர்களே.



## கிரிமினல்

*நியாய விசாரணை இலாகா*

ஜெகம் :—மாமா! தாங்கள்நேற்று எங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, ஓர் விஷயம் தங்களிடம் கேட்க மறந்துவிட்டேன்.

இராமானுஜம்:—நல்லது, அதென்ன?

ஜெகம்:—போலீஸார் குற்றவாளிகளைப் பிடித்து நியாய விசாரணைக்குக் கொண்டுவருபவர்கள் என்றீர்களே; அந்த நியாய விசாரணை நடத்துகிறவர்கள் யாராயிருப்பார்கள்?

இராமானுஜம்:—சண்டை, சச்சரவு, திருட்டு, கொள்ளை முதலியவைகள் ஒருவிதமான குற்றங்

கள். இக்குற்றங்களுக்குக் கிரிமினல் குற்றம் என்று பெயர். இவைகளை விசாரணைசெய்பவர் களுக்கு மாஜிஸ்டிரேட்டுகள் என்று பெயர். பட் டணங்களில், போலீஸாரால் கொண்டுவரப் படும் சுகாதார விஷயங்களுக்கு விரோதமான குற்றங்கள், சண்டை, தெருக்கலகம் முதலிய வைகளை விசாரிப்பதற்கு பிரத்தியேகமான மாஜிஸ்டிரேட்டுகளை நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பெஞ்சு மாஜிஸ்டிரேட்டுகள் என்று பெயர். இவர்கள் தகுந்த படிப்பாளி களாகவாவது அல்லது பென்ஷன் பெற்ற மாஜிஸ்டிரேட்டுகளாகவாவது இருப்பார்கள். இவர்களுக்குச் சம்பளம் கிடையாது. கௌர வத்திற்காகவும், ஜனங்களின் நன்மைக்காக வும், இவர்கள் வேலை செய்வார்கள்.

ஜெகம்:—நீங்கள் சொல்லுவது போல், ஒருவன் மற்றொருவனை அநியாயமாய் அடித்து அவன் பொருள்களைப் பிடுங்கிக்கொள்கிறான். மற்றொ ருவன் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டோ அல்லதுவேறே காரணத்தினாலோ இன்னொரு வனைக் கொலைபுரிகிறான். இவை இரண்டும் கிரிமினல் குற்றந்தானே? இவைகளை விசா ரணை செய்வது அந்தமாஜிஸ்டிரேட்டுத்தானா?

இராமானுஜம்:—ஒருவனுடைய பொருளைப்பிடுங்கிக்கொள்வதற்கும், மற்றொருவனைக் கொலைபுரிவதற்கும் எவ்வளவோ வித்தியாசம். பொருளை அபகரிப்பது, முன் சொல்லியதுபோல அவ்வளவு பெரிய குற்றமல்ல. ஆனால், ஒருவனைக்கொலைபுரிவது பெரும் குற்றமாகும். அப்படியே சிறிய குற்றங்களை விசாரணை செய்ய, அவ்வளவு பெரிய படிப்பாளிகள் அவசியமில்லை. ஒவ்வொரு சொற்பக் குற்றங்களையும் பெரிய கோர்ட்டார் விசாரணை செய்வதாயிருந்தால், பெரிய குற்றங்களையும் சரியான விசாரணை நடத்தமுடியாது. ஆதலால் சர்க்கார் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளை பலவிதமானவைகளாகப் பிரித்து, பலவித மாஜிஸ்டிரேட்டுகளை நியமித்து அவர்களுக்கு ஏற்ற அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

தம்பீ! ஜேகம்! உன் பாட்டனார் வசிக்கும் கிராமத்திற்கு முன்போயிருந்தாயே. அவ்விதமான கிராமங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளில் நடக்கும் சொற்பக் குற்றங்கள் எல்லாம் மாஜிஸ்டிரேட்டுகள் வாசம் செய்யும் நம்மூரைப்போன்ற பட்டணங்களுக்கு விசாரணைக்கு வருவதாயிருந்தால், அவர்களுக்குளவ்வளவோ செலவாகும். அதற்காக ஒவ்வொரு

கிராமங்களிலும், கிராமாதிகாரி எனப்பட்ட ஒருவரை நியமித்து, அக்கிராமங்களில் நடக்கும் சொற்பச்சச்சரவு, 1 ரூபாய்க்குட்பட்ட திருட்டு முதலிய கிரிமினல் குற்றவிசாரணை பண்ணவும் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இதைவிடச் சற்று பெரிய குற்றங்களை விசாரணை பண்ண 3-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் 1 மாதம் காவல் சிட்சையும் 100 ரூபாய் வரையில் அபராதமும் விதிக்கக்கூடியவர்கள்.

ஆறுமாத காவல் சிட்சையும் 200 ரூபாய் வரையில் அபராதமும் விதிக்க அதிகாரம் பெற்றிருப்பவர்கள் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் ஆவர்.

கீழ் கோர்ட்டுகளில் இருந்துவரும் அப்பீல்களை அல்லது பெருங்குற்றங்களை விசாரணை செய்பவர்கள் முதலாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள். இவர்கள் 2-வருஷ தண்டணையும், 1000 ரூபாய் வரையில் அபராதமும் விதிக்க அதிகாரம் பெற்றவர்கள்.

ஜெகம்:—மாமா! தாங்கள் இதுபரியந்தம் சொல்லிய யாவையும் விளங்கின. 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் என்று சொன்னீர்களே அவர் யார்?

இராமானுஜம்:—ஒவ்வொரு ஜில்லாவையும், பல டிவிஷன்களாகப்பிரித்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு டிவிஷன் ஆபீஸர் வசம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது உனக்குத் தெரிந்த விஷயமே அந்த டிவிஷன் ஆபீஸர்களே முதலாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள். ஜில்லாக் கலெக்டரும் முதலாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் என்று சொல்லப்படுவர். இதுவரை ஜில்லா மாஜிஸ்டிரேட்டு என்றும் அழைப்பதுண்டு.

ஜெகம்:—சரிதான். ஒருவன் கொலை செய்ததாக மற்றொருவன் வழக்குக் கொண்டுவந்திருக்கிறானென்று வைத்துக்கொள்வோம், கொலைசெய்தது உண்மையாயிருக்கிறதென்று டிவிஷனல் அதிகாரி எப்படி அறிந்துகொள்வார். இது கனமான விஷயமாயிருக்கிறதே. இதில் அதிக விமரிசை வேண்டியிருக்குமே?

இராமானுஜம்:—வாஸ்துவந்தான். இதினால் குற்றவாளி எனப்பட்டவன் உயிரே போகவேண்டியிருக்கிறது. ஆகையினால் இவ்விதமான குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டியிருப்பதால், ஒருவர் தீர்மானத்தையே ஆதாரமாகக் கொள்கிறதில்லை. இவ்விதமான பெரிய குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு ஜில்லாவிற்கும்,

அல்லது இரண்டு ஜில்லாவிற்கும் பொதுவாக ஓர் பெரிய நியாய விசாரணைக்கோர்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இக்கோர்ட்டுக்கு ஜில்லா ஸெஷன்ஸ் கோர்ட் என்று பெயர். இந்தக் கோர்ட்டில் நியாய விசாரணை வேறுவிதமானது. இந்தக்கோர்ட்டில் நியாய விசாரணை செய்யும் ஜட்ஜிக்கு ஸெஷன்ஸ் ஜட்ஜ் என்று பெயர். இவருக்கு உதவியாக ஜ்யூரர்கள் என்று 9 பேருக்கு மேற்படாத யோசனைத் துணைவர்கள் உண்டு. இவர்கள் தகுந்த படிப்பாளிகளாகவும் யோக்கியர்களாகவும் இருப்பார்கள். விசாரணை முடிந்ததும், நியாயாதிபதி இந்த ஜ்யூரர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டே முடிவான தீர்ப்புச் செய்கிறார். நியாயாதிபதிக்கும் இந்த ஜ்யூரர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், அவர்களுக்கும் பெரிய நியாயாதிபதியின் தீர்மானத்தின்படியே தீர்ப்பிடுவார்கள் ஜ்யூரர்களைப் போலவே அஸெஸர் என்ற மற்றொரு வகுப்பினர், நியாய விசாரணையில் ஸெஷன்ஸ் ஜட்ஜிக்குத் துணையாக இருக்கிறார்கள். இவர்கள் அபிப்பிராயம் ஸெஷன்ஸ் ஜட்ஜியின் அபிப்பிராயத்திற்கு வேறுபட்டாலும், ஜ்யூரர்களின் அபிப்பிராயம் ஸெஷன்ஸ் ஜட்ஜியின் அபிப்பிராயத்திற்கு ஒத்திருக்குமானால் தன்பிரியம்போல் அவர்முடிவுசெய்யலாம்

ஜெகம் :—மாமா! எவ்வளவு அருமையான ஏற்பாடுகள்! ராஜாங்கத்தின் பிரஜைகள் க்ஷேமமாய் வாழ்வதற்கு அவர்களுக்குள் சமாதானம் அவசியம். அப்படி நமது நாட்டில் சமாதானம் ஏற்படவும், வழக்கு நேரிடுமானுல், அவைகளைத் தீர்த்துக்கொள்ளக் கோர்ட்டுகளும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். நியாய ஸ்தலங்கள் இல்லாவிடில், பலமுள்ளவனே ஜெயங்கொண்டவனுவான். அப்போது அநியாயமும், கொள்ளையும் எங்கு முண்டாகும்.

இன்னுமொரு விஷயம் மாமா, அதாவது நமது தேசத்தில் பலவித ஜாதியினர் இருக்கிருர்களே. அவர்கள் எல்லாருக்கும் நியாயச் சட்டம் ஒரேவிதமானது தானு?

இராமானுஜம்:—சந்தேகமென்ன? ஓர்குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்குத் தகப்பன், ஒவ்வொரு விதமாய் சட்டங்கள் ஏற்படுத்தி அவர்களை வித்தியாசமாய் நடத்திஞல் தகப்பனின் அன்பு எங்கே? எப்படிப் பிள்ளைகள் சமாதானமாய்ச் சேர்ந்து வாழ்வார்கள்? அதுபோல இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஜாதியிலும், மதத்திலும் வேறுபட்டிருந்தாலும், யாவரும் காருண்யம் நிறைந்த நமது சக்ரவர்த்தியவர்களின் பிர

ஜைகளே ஆவர். கிரிமினல் சம்பந்தமான குற்றங்கள் செய்தவர் யாராயிருந்தாலும் அக்குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை அடைய வேண்டியதுதான்.

ஜேகம் :—சிஷ்டபரிபாலனம் துஷ்ட நிக்ரகம் என்பது அரசர்க்கழகு. அப்படியே துஷ்டர்களை யடக்கவும், நாட்டில் சமாதானம் ஏற்பட்டு ஜனங்கள் க்ஷேமமாய் வாழவும், தகுந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாய்த் தெளிவாயிற்று.

---

## சிவில் வழக்கு

அவைகளைத் தீர்க்கும் அதிகாரிகள்
நியாய விசாரணை முறை முதலியவை

ஜேகம் :—மாமா! சண்டை, சச்சரவு, திருட்டு கொள்ளை, வழிப்பறி, மானபங்கம் கொலை முதலியவைகள் கிரிமினல் குற்றங்கள் என்றும், அவைகளை விசாரித்து நியாயம் தீர்க்கும் அதிகாரிகளுக்கு மாஜிஸ்டிரேட்டுகள் என்றும் நேற்று தாங்கள்சொன்னீர்களே. இதைத்தவிர ஜனங்களுக்குள் வேறே விதமான வழக்குகள் உண்டாகிறதில்லையா?

இராமானுஜம்:—உண்டாகின்றன. அதைப்பற்றி உனக்கு விபரமாய்ச் சொல்லுகிறேன், கவன

மாய்க்கேள். உன் தாயார், உன் அக்காளிடத்தில் கொஞ்சம் மிட்டாய் கொடுத்து நீங்களிருவரும் சரியாய்ப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்ருல், நீங்கள்சமாதானமாய்ப் பங்கிட்டுக்கொள்வீர்களா? உனக்கு அதிகம், எனக்குக் கொஞ்சமென்று வழக்காடிக்கொண்டு இழுபரியாய் உன் தாயாரிடம் பிரியாது செய்வீர்களே.

அவ்விதமாகவே, ஜனங்களிலும் சிலர் பொருளின்மேல் மிஞ்சின ஆசைகொண்டு தங்கள் கௌரவத்தையும், அந்தஸ்தையும் மறந்து அநியாயமாய்ப் பிறர் பொருளை அபகரிக்க முயற்சிக்கிருர்கள், சிலர் தாங்கள் வாங்கிய கடனை உத்தரிக்க மனமில்லாமல் ஏமாற்றி மோசம் செய்யத் துவக்குகிருர்கள். இவைகள் எல்லாம் ஓர்வகையான குற்றமாகும். இவைகள் சிவில் குற்றங்கள் எனப்படும். சர்க்கார் மத்தியஸ்தராய் இருந்து, குடிகளிடத்தில் உண்டாகும் இவ்வழக்குகளைத்தீர்க்க பிரத்தியேகமான நியாய அதிகாரிகளையும், நியாய ஸ்தலங்களையும் ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

ஜெகம்:—தாங்கள் சொல்லுவதை கவனித்தால், இவ்வழக்குகளில் சிக்கலான விஷயங்கள் அதிகம் உண்டு. இவைகளை விசாரிக்கத்தகுந்த ஆட்

களில்லாவிட்டால் சரியான நியாயம் கிடைப்பது அருமையாய்விடுமே!

இராமானுஜம்:—உண்மைதான். வியாஜ்யத்தின் பெறுமானத்திற்கு ஏற்றவாறு உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் இவ்விதமான வழக்குகளின் சம்மந்தமான சட்டங்களில் படித்துத்தேரிய அநுபோகசாலிகளாயிருப்பார்கள்.

கிராமங்களில் உண்டாகும், சொற்ப கொடுக்கல், வாங்கல், 20 ரூபாய்க்கு உட்பட்டவைகளாயிருந்தால் கிராமாதிகாரியே விசாரணை செய்து தீர்த்துவிடலாம். கட்சிக்காரர் இருவரும் சம்மதித்தால் ரூபாய் 20-க்கு மேற்பட்டு, 200 ரூபாய் வரையில் விசாரணை செய்து நியாயம் தீர்த்துவிடலாம். இவ்விதமான வழக்குகளைத் தீர்க்கும்போது இவருக்குக் கிராம முனிசீப்என்று பெயர்.

கிராம முனிசீபுகள் சாதாரணமாய் அவ்வளவு படிப்பு உள்ளவர்களாயில்லாததாலும் சில சமயங்களில் சுயஜாதி அபிமானமுடையவர்களாய் இருக்கக்கூடுமாதலாலும், இவர்களால் செய்யப்படும் பிழைகளை மறுவிசாரணை செய்ய ஒவ்வொரு தாலுகாவிலும் ஓர் நியாயாதிபதியை நியமித்திருக்கிறார்கள். இவருக்கு ஜில்லா முனிசீப் என்று பெயர். இவர் ரூபாய் 20-க்கு மேற்பட்டு ரூ 1000 அல்லது ரூ 2000

வரையில் பெறுமான வழக்குகளைத் தீர்க்கலாம். அதிகத்தொகை பெருமான சொத்துக்களைப் பற்றிய வழக்குகளை விசாரிக்கவும், கீழ்க்கோர்ட்டிலிருந்துவரும் வியாஜ்ஜிங்களை மறு விசாரணை பண்ணவும், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஜில்லா நியாயாதிபதியை நியமித்திருக்கிறார்கள். இவர் தீர்க்கவேண்டிய வழக்குகள் அநேகமிருப்பதால் இவர்களுக்கு உதவியாக சப்ஜட்ஜிகளையும் நியமித்திருக்கிறார்கள்.



ஹைக்கோர்ட்

இங்கிலாந்தில் மந்திராலோசனைச் சங்கத்தைச் சேர்ந்த நியாய சபை.

(Judicial Committee)

இராமானுஜம்:—ஜெகம்! நான் அன்று நமது இராஜாங்கத்தார் நமது வழக்குகளைத் தீர்க்கும்

மத்தியஸ்தர்களாய்க்கூட இருக்கிறார்களென்றும், அதற்காக பலவிதமான நியாய சபைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றார்களென்றும் சொன்னது ஞாபகமிருக்கிறதா!

ஜெகம்:—ஆம்; மாமா! நன்றாய் ஞாபக மிருக்கிறது. ஆனால் இன்னும் ஓர் சந்தேகம் உண்டாகிவிட்டது. அதாவது ஜூரர்களுக்கும் ஸெஷன்ஸ் ஜட்ஜிக்கும் நியாய விசாரணையில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், மேல் அதிகாரியின் தீர்மானப்படியே தண்டனை விதிப்பார்கள் என்று சொன்னீர்களே. அந்த மேலதிகாரிகள் யாரென்றும், அவர்கள் எங்கேயிருக்கிறார்களென்றும் அறிய விரும்புகிறேன். தயவுசெய்து சொல்வீர்களா!

இராமானுஜம்:—சொல்லுகிறேன் கேள்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லாக் கோர்ட்டுகளிருக்கின்றன. ஜில்லாக் கோர்ட்டு என்றால் ஒவ்வொரு ஜில்லாவிலும் நடக்கும் சிவில் வியாஜ்ஜியங்களை விசாரணை செய்து தீர்மானிக்கும் கோர்ட் என்று அர்த்தமாகும். இன்னும் ஒவ்வொரு ஜில்லா அல்லது இரண்டு ஜில்லாவிற்கு ஒன்றாக ஸெஷன்ஸ் கோர்ட்டுகள் உண்டென்று சொன்னது, உனக்கு ஞாபகமிருக்க

லாம். அக்கோர்ட்டுகளில் கிரிமினல் சம்பந்த மான குற்றங்களை விசாசரணை செய்வார்கள் என்று சொன்னேன். இக்கோர்ட்டுகளில் அபிப்பிராய பேதங்கள் அல்லது வாதி பிரதி வாதிகளுக்கு இக்கோர்ட்டுகளில் சரியான நியா யம் கிடையாத பக்ஷத்தில், இன்னும் மேல் கோர்ட்டாகிய ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு ஹைகோர்ட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கோர்ட்டார் அதிகத்தொகை சம்பந்த மான வழக்குகளையும், ஸெஷன்ஸ் கோர்ட்டி லிருந்துவரும் அப்பீல்களையும், தலைமைப்பட் டணங்களிலிருந்து வரும் பெரிய வழக்குகளை யும் விசாரணை செய்வார்கள். சாதாரணமாய் இக்கோர்ட்டுகள் ஒவ்வொரு மாகாணத்தின் தலைமைப்பட்டணத்தில்தான் இருக்கும். நமது மாகாணத்தின் தலைமைப்பட்டணமாகிய சென் னைமாநகரில் ஓர் ஹைகோர்ட்டு இருக்கிறது. இக்கோர்ட்டின் தீர்மானத்தின் மேல்திருப்தி யடையாதவர்கள் நம் ராஜாங்கத்தார் தம் சொந்த நாட்டில் அமைத்திருக்கும் மந்திரா லோசனை நியாய சபைக்கு அப்பீல் செய்து கொள்ளுவார்கள். ஆனால், இது லேசான காரி யம் அல்ல. அங்கு அப்பீல் செய்துகொள்ளு பவர்கள், மிக்க திரவியவான்களாக இருக்க

வேண்டும். அக்கோர்ட்டில் அப்பீல் செய்வ தற்கு அதிகச் செலவாகும். அதிகக் காலதாமதமும் ஆகும்.



## படிப்பிலாகா

ஜெகம் தாய்:—ஐயா! உபாத்தியாயரே! வாருங்கள்; நமஸ்காரம். ஏது இவ்வளவு தூரம்? தங்களைக் கண்டு பேசவேண்டுமென்று எனக்கு அதிக ஆவல். மெத்த நல்லது. தாங்களே வந்து விட்டீர்கள். இதோ நாற்காலியில் உட்காருங்கள்.

உபாத்தியாயர்:—மெத்த சந்தோஷம். ஜெகம் எங்கே? நாளை நமது பள்ளிக்கூடத்தில் பரீக்ஷையாயிற்றே, பழைய பாடங்களை எல்லாம் ஜெகம் திருப்பி படிக்கிறானா?

ஜெ தாய்:—இரவில் விளக்கின் முன் உட்கார்ந்து, ஜெகம் மிக்க கவலையோடுதான் படித்துவருகிறான். உங்கள் பள்ளிக்கூடம் சிறிய பள்ளிக்கூடமாயிற்று, அதில் என்ன பரீக்ஷை?

உபாத்:—எங்கள் பள்ளிக்கூடம் சிறிய பள்ளிக்கூடந்தான். ஆயினும் அதையும் சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். அதில் சரியாய்ப் பாடங்கள் நடந்து வருகின்றனவாவென்றும், பிள்ளைகள் நல்ல தேர்ச்சி பெற்றிருக்கிறார்களாவென்றும் அடிக்கடி பரிசோதித்து வருகிறார்கள்.

தாய்:—ஜெகம் தங்கள் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்தவுடன், வேறே பெரிய ஸ்கூலுக்கு அனுப்பவேண்டி யிருக்குமே. அப்படிப்பட்ட ஸ்கூலுக்கும் தங்கள் பள்ளிக்கூடத்திற்கும் வித்தியாசமென்ன வென்பதைத் தயவுசெய்து சொல்வீர்களா?

உபாத்:—எங்கள் பள்ளிக்கூடத்தைப்போன்ற பள்ளிக்கூடங்களுக்கு எலிமெண்டரி ஸ்கூல்கள் என்று பெயர். அவற்றைப் பிரதம பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்லுவார்கள். இவ்விதமான பள்ளிக்கூடங்களிலும் மூன்று விதம் உண்டு. முதல்கிரேட் அதாவது 8-வது வகு

ப்பு முடிய உள்ள பாடசாலைகள். இரண்டாவது கிரேட்; அதாவது 5-வது வ்குப்பு முடிய உள்ள பாடசாலைகள். மூன்றாவதுகிரேட்; அதாவது நான்காவதுவகுப்புமுடியஉள்ளபாடசாலைகள்.

எலிமெண்டரி ஸ்கூல்களில் பயிலும் மாணுக்கர்களின் சம்பளம் மிகவும் சொற்பம். ஏனெனில், எல்லாப்பிள்ளைகளும் படிக்கவேண்டுமென்பது சர்க்கார் நோக்கம். இவைகளில் படிக்கும் பிள்ளைகள் சர்க்காரின் உயர்ந்தவேலைகளுக்குத் தகுந்தவர்களாக பாவிக்கப்படமாட்டார்கள். இவர்கள் உலகில் தங்கள் ஜீவிய காலத்தில் தங்கள் வீட்டுக்கணக்கு முதலியவைகளைப் பார்த்துக்கொள்ளவும், வியாபாரம் முதலிய வழிகளில் பிரவேசிக்கவும் தகுதியுள்ளவர்களாவார்கள்.

உயர்தரப்படிப்புப் படிக்கவேண்டுமானல், அதற்கு உயர்தர பாடசாலைகளென ஏற்படுத்தியிருக்கிருர்கள். அதில் ஆருவது பாரம் முடிய வகுப்புகளிருக்கின்றன. அந்த ஆருவது பாரம் படித்துவரும் மாணுக்கர்கள், கடைசியில் சர்வகலாசாலை சங்கத்தாரால் (University) ஏற்படுத்தப்பட்ட ஓர் பரீக்ஷையில் தேறினல் அவர்கள் பள்ளிக்கூட முடிவு பரீக்ஷயில் தேறினதாக பாவிக்கப்படுவார்கள். அந்த பரீக்ஷயில்

தேறியவர்கள் சர்க்கார் உத்தியோகங்கள் பெற இலாயக்குடையவர்கள் ஆவார்கள். இந்த பரீக்ஷையில் தேறிய மாணுக்கர்கள் சர்வகலா சாலையிலும் (College) பிரவேசித்து படிக்கலாம். அவ்வகுப்புகளுக்கு இண்டர்மீடியேட் என்றும், (B.A.) பி. ஏ. என்றும் (M.A.) எம். ஏ. என்றும் முறையே சொல்லுவார்கள். இதில் தேறியவர்கள் பெரிய உத்தியோகங்களுக்குத் தகுதியுள்ளவர்கள்.

இதுவுமல்லாமல் பயிர்த்தொழில், வர்த்தகம், வைத்தியம், சட்டம், சிற்பம், சித்திரம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பிக்க தொழிற் கலாசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தாய்:—ஐயா! இவைகளில் பயிலும் மாணுக்கர்களுக்குப் போதிக்க, பள்ளிக்கூட அறிவு மாத்திரம் பெற்ற ஆட்களால் இயலாதே. போதிக்கும் ஆசிரியர்களுக்கு வேறே பிரத்தியேகமான பள்ளிக்கூடம் ஏற்படவேண்டுமே?

உபாத்:—சந்தேகமில்லாமல் இருக்கவேண்டும். அப்படியே ஒவ்வொரு ஜில்லாவிலும் உபாத்திமைத் தொழிலைக் கற்பிக்கப் போதனை முறை பாடசாலைகளென்ற டிரெயினிங் ஸ்கூல்களை ஏற்படுத்தி அதில் மாணவர்களுக்குத் திரவிய

சகாயம் செய்து மேலான போதனு முறையி லும் பயிலச் செய்கிறுர்கள்.

சர்வ கலாசாலைப் பரீக்ஷையில்தேறியவர்கள், போதனு முறை பயிற்சியடைய சென்னையில் உபாத்திமை பயிற்சிச்சாலை என்ற டீச்சர்ஸ் காலேஜ் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறுர்கள்.

---

## படிப்பிலாகா

ஜெகம் தாயார்:—ஐயா! தாங்கள் முன் சொல்லிய பாடசாலைகளிலும், சர்வ கலாசாலைகளிலும், வேலை சரியாய் நடக்கிறதாவென்று மேல்பார்க் கவேண்டியது அவசியமாயிற்றே, அப்படி மேல்பார்க்க அதிகாரிகள் யாராவது இருக்கி றுர்களா?

உபாத்:—எந்த வேலையானுலும் மேல் அதிகாரி கள் இல்லாவிட்டால் அது ஒழுங்காய் நடப் பது கூடாதகாரியம். அப்படியே நமது மாகா ணத்து வித்தியா இலாகாவுக்குத் தலைமையதி காரி 'டைரக்டர் ஆப் வித்தியா இலாகா.'

அவருக்குக்கீழ் இந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிற்கும், படிப்பு விஷயமாய் மேலதிகாரியாக'டிஸ்டிரிக்ட் எடிகேஷனல் ஆபீ ஸர்' என்று ஒருவர் நியமனம் பெற்றிருக்கிறுர்.

அவருக்குக் கீழ் அந்தந்த ஜில்லாவின் விஸ்தீரணத்திற்கும் அவசியத்திற்கும் தக்கபடி அந்தந்த ஜில்லாக்களில் இத்தனை "டிப்யூடி இன்ஸ்பெக்டர்கள்" என நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

'டிஸ்டிரிக்ட் எடிகேஷனல் ஆபீஸர்' அந்தந்த ஜில்லாவிலுள்ள காலேஜ், ஸெக்கண்டரி பாடசாலைகளை பரிசோதனை செய்யவும் தனக்குக் கீழ்ப்பட்ட டிப்யூடி இன்ஸ்பெக்டர்களுடைய வேலைகளை தனிக்கை செய்து டைரக்டர்க்கு ரிப்போர்ட்டு செய்வதும், எலிமெண்டரி பாடசாலைகளை அங்கீகாரம்செய்ய ஜில்லா கல்விச் சங்கத்திற்கு (டிஸ்டிரிக்ட் எடிகேஷனல் கவுன்சில்) சிபார்சு செய்வதும் இவருடைய அலுவலாக இருக்கிறது.

'டிப்யூடி இன்ஸ்பெக்டர்கள்.' அந்தந்த ரேஞ்சிலுள்ள பாடசாலைகளை பரிசோதனை செய்து, டிஸ்டிரிக்ட்டு எடிகேஷனல் ஆபீஸாருக்கும், ஜில்லா கல்விச் சங்கத்திற்கும் ரிப்போர்ட் செய்வார்கள். இதுவுமன்றி, அதிகாரிகள் எடுத்துக்காட்டிய குறைபாடுகளை பள்ளிக்கூடங்களில் நிவர்த்தி செய்திருக்கிறார்களாவென்றும் அவர்கள் கவனித்து வரவேண்டும். உபாத்திமை சங்கங்களை ஏற்படுத்தியும் அதில்

மாதிரிப்பாடங்களை நடத்தியும் வரவேண்டும். பாடசாலைகளில் உண்டாகும் குறைபாடுகளையும் மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவும் வேண்டும்.

அம்மா! கல்விச்சம்பந்தமாய் உள்ள விஷயங்கள் அனைத்தையும் கண்காணித்து வருபவர் கல்வி மந்திரியாவர். இவர் சென்னையில் கவர்னர் சபையில் உள்ள மந்திரிகளில் ஒருவர்.

தாய்:—ஐயா! தாங்கள் சொன்னது விளங்கிற்று. ஆனால் பள்ளிக்கூடங்களில் உள்ள உபாத்தியாயர்களுக்கு சர்க்காரே சம்பளம் கொடுக்கிறார்களோ?

உபாத்:—சில பள்ளிக்கூடங்களை சர்க்காரே நியமித்திருக்கிறார்கள். அவ்விதம் சர்க்கார் ஏற்படுத்திய பாடசாலைகளுக்கு அவர்களே மாதாமாதம் சம்பளம் கொடுக்கிறார்கள். இவ்விதமான பாடசாலைகளுக்கு பப்ளிக் மானேஜ்மேண்டு பாடசாலைகளென்று பெயர். இப்படிப்பட்ட பாடசாலைகளை முனிசிபாலிட்டியாரும், லோக்கல் போர்டாரும் நடத்தி வருகிறார்கள். இவைகளுக்கு முனிசிபல் அல்லது லோக்கல் போர்டு ஸ்கூல் என்று பெயர்.

இவைகளைத்தவிர கிறிஸ்துவ பாதிரிமாரா லும், சில கல்வியபிவிர்த்தியை நாடும் கல்வி மான்களாலும் சில பள்ளிக்கூடங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இப்பள்ளிக்கூடங்களுக்கு பிரைவேட் மானேஜ்மேண்டு பாடசாலைகள் என்று பெயர் இப்படிப்பட்ட ஸ்கூல்களும் நடைபெற்று வருவதற்கு, சர்க்கார் திரவிய சகாயம் செய்துவருகிறார்கள். அவ்விதமான உதவியை பெற்றும் தக்க உபாத்திமார்களை பள் ளிக்கூடங்களில் நியமித்து அவ்வுபாத்திமார்க ளுக்கு அந்தமானேஜர்கள் சம்பளம் கொடுத்து நடத்திவருகிறார்கள்.

### பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் உதவி

### (Grants)

தாய்:—ஐயா! சில எலிமெண்டரி பாடசாலைகளை யும், சில ஸெக்கண்டரி ஸ்கூல்களையும், சில காலேஜ்களையும், சில தொழிற்சாலைகளையும் சர்க் கார் தங்கள் மானேஜ்மெண்டிலும், மற்றும் சிலதை பிரைவேட் மானேஜ்மெண்டில் சர்க் கார் அங்கீகாரம் பெற்று நடந்து வருகிறதா கச் சொன்னீர்களே. அப்படி பிரைவேட் மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களை நடத் தும் மானேஜர்களுக்கு, அப்பள்ளிக்கூடத்து உபாத்திமார்களுக்குச் சம்பளம் கொடுப்பதினு

லும், பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய கட்டிடம் கட்டுவதிஞலும், பெஞ்சு, நாற்காலி, மேஜை, புத்தகம் முதலியவைகளை வாங்குவதிஞலும் நஷ்டம் உண்டாகுமே? அப்படி நஷ்டம் ஏற்படுமாஞல் அப்பள்ளிக்கூடங்களை வைத்து நடத்துவது முடியாத காரியமாகிவிடுமே?

உபாத்:—பிரைவேட் மானேஜ்மெண்டு ஸெக்கண்டரி ஸ்கூல்களையும், காலேஜ்களையும் வைத்து நடத்துபவர்கள், பிள்ளைகளிடமிருந்து தக்க சம்பளம் வசூல் செய்கிருர்கள். அப்பள்ளிக்கூடங்களுக்கு மூலதனமாக வைத்திருக்கும் திரவியத்தின் வட்டியும் வருவதுண்டு. வேறு விதமான வருமானங்களும் உண்டாகலாம். ஆதலால் இவைகளைக் கணக்குப்பார்த்து, உபாத்திமார்களுக்குச் சம்பளம் கொடுத்தல், கட்டிடம், சாமான் ரிப்பேர், மற்ற சில்லரைச் செலவுகளுக்கு அவ்வருமானம் போதாமலிருந்தால், அதிகமாகச் செலவான தொகையை சர்க்கார் கிராண்டாகக் கொடுத்து உதவி, அப்பள்ளிக்கூடங்கள் நடைபெற்றுவரும்படி செய்கிருர்கள். கட்டிடம் சாமான், பள்ளிக்கூடத்துப் புத்தகசாலைக்கு வேண்டிய புத்தகங்கள் ஆகிய இவைகள் அந்த ஸெக்கண்டரி ஸ்கூல்களுக்கும், காலேஜ்களுக்கும் அவசியமென்று படிப்

பிலாகா உத்தியோகஸ்தர்களுக்குத் தோன்று மானுல் அவைகளால் நேரிடும் செலவில் பாதியைச் சர்க்கார் கொடுத்து உதவுகிருர்கள். பிரைவேட் மானேஜ்மெண்டிற்குட்பட்ட தொழிற் சாலைகள் சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தால், அவைகளைச் சர்க்கார் பார்வையிட்டு, அவைகளின் விருத்தி முதலியவைகளைக் கவனித்து அவைகளுக்கு எவ்வளவு திரவிய சகாயம் செய்யலாமென்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அவ்வளவு பொருள் கொடுத்து உதவி செய்கிருர்கள்.

நம் பள்ளிக்கூடங்களைப் போன்ற மூன்று விதமான கிரேட் பிரைவேட் மானேஜ்மெண்டு எலிமெண்டரி பாடசாலைகளுக்குத் திரவிய சகாயம் வேறுவிதமாகக் கொடுத்து உதவுகிருர்கள்.

i. உபாத்திமைத்தொழில் பயிலாதவராய் லோயர் கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்தவர்களாய் இருந்தால் வருஷம்—ரூ 48-0-0ம் ஹையர் கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்தவர்களானல் வருஷம்—ரூ 72.

ஸெக்கண்டரி கிரேடுக்கேற்ற வகுப்பில் படித்துத் தேறியவர்களாயிருந்தால் வருஷம் ரூ 96.

ii. உபாத்திமைத் தொழில் பயின்றவராய் லோயர் கிரேடாக இருந்தால் ரூ 84—0—0ம் ஹையர் கிரேடாக இருந்தால் ரூ 120—0—0ம் செக்கெண்டரிகிரேடாகஇருந்தால் ,, 180-0-0ம்

திரவிய சகாயமாகக் கொடுத்து உதவுகிறார்கள். பள்ளிக்கூடபோதனை, சாமான் விஷயங்களில் ஏற்றம், குறை முதலியவைகளைக் கவனித்து நூற்றுக்கு 25 ரூபாய் அதிகப்படுத்தி அல்லது குறைத்து கொடுக்க பரீக்ஷை அதிகாரிகள் சிபார்சு செய்வார்கள். நன்றாய் நடந்து வரும் உயர்தர எலிமெண்டரிப் பாடசாலைகளுக்கு ஸெக்கண்டரி கிரேடு ஸர்டிபிக்கட் பெற்றஉபாத்திமார்கள் நியமிக்கப்பட்டிருக்கும் எலிமெண்டரி பாடசாலைகளுக்கு 100-க்கு 50-ரூபாய் அதிகப்படுத்தித் திரவியசகாயம் செய்வதற்கு பரீக்ஷயதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு

தாய்:—ஐயா! ஏன் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு மாத்திரம் இவ்வளவு தாராளமாய்த் திரவிய சகாயம் செய்கிறார்கள்?

உபாத்:—நான் முன் தங்களுக்குச் சொன்னது போல், எலிமெண்டரி படிப்பை நாட்டில் பரவச்செய்யவேண்டுமென்பது சர்க்கார் நோக்கமானதினாலும், எலிமெண்டரி ஸ்கூல்களில்

வாசிக்கும் மாணுக்கர் கொடுக்கும் சம்பளம் உபாத்திமார்கள் அல்லது மானேஜர்களுக்கு போதாததினுலும் இவ்விதமாக சர்க்கார் பிரைவேட் மானேஜ்மெண்டிற்குட்பட்ட எலிமெண்டரி பாடசாலைகளுக்குத் திரவிய சகாயம் இவ்வளவு தாராளமாய்ச் செய்கிருர்கள்.

தாய்:—தாங்கள் சொல்வது வாஸ்தவந்தான். நம் குழந்தைகள் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதில் சர்க்காருக்கு ஆவல் அதிகமென்பது நன்ருய் விளங்குகிறது. இன்னுமொரு விஷயம் கேட்க விரும்புகிறேன். எலிமெண்டரி பாடசாலைகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கும், புத்தகசாலைக்குத் தேவையான புத்தகங்கள், சாமான்கள் வாங்குவதற்கும் சர்க்கார் ஏதாவது உதவி செய்கிருர்களா ?

உபாத்:—ஆம், எலிமெண்டரி பாடசாலைகளுக்கு அவசியமென்று பரீக்ஷை அதிகாரிகளுக்குத் தோன்றினல் ஸெக்கண்டரி ஸ்கூல்களுக்குச் செய்வதுபோலவே, கட்டிடச்செலவில் பாதியும், புத்தகம் முதலிய சாமான் வாங்குவதில் நேரிட்ட செலவில் பாதியும் கொடுக்கிருர்கள்.

தாய்:—நமது மாகாணத்தில் படிப்பில்குறைவான ஜாதியார்களில் சில வகுப்பார் படிப்பில் விசே

ஷத் தேர்ச்சியுடையவர்களாக விளங்குகிருர்க ளே! இவர்களைப்போல மற்ற வகுப்பார்களும் முன்னேற்றம் அடையாமலிருப்பதற்குக் கார ணம் என்ன?

உபாத்:—அம்மா! இங்ஙனம், படிப்பில் குறை வான ஜாதியார்கள் படிப்பில் தேர்ச்சியுடைய வர்களாக விளங்குவதற்குக் காரணம், அந்த வகுப்பாருக்குள் கல்வியைப் பரவச்செய்ய சங் கங்கள் ஏற்பட்டு வேலே செய்து வருவதே.

தாய்—மற்ற வகுப்பார்களுக்குள் இத்தகைய சங் கம் ஏற்படாமலிருப்பது அவர்களுக்குள் படித் தவர்கள் இல்லாமலிருப்பதினுல் தானே?

உபாத்:—அம்மா! படித்தவர்கள் அதிகமாய் இல் லாமையினுல் தான்.

தாய்:—அப்படியானுல் இவர்களுக்கு கல்வியறிவு ஏற்படுவது எவ்விதம்?

உபாத்:—படிப்பில் குறைவுற்றிருக்கும் வகுப்பாருக் குள் ஆரம்பப்படிப்பாவது பரவும் வண்ணம் ஜில்லாக் கல்விச்சங்கம் (**District Educational Council**) என்று ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தார் சகல வகுப்பாருக்கும் ஆரம்ப படிப்பைக் கொடுக்க

ஏற்பாடு செய்வதுடன் படிப்பில் குறைந்திருக்கும் வகுப்பாரின் கல்வியை விசேஷமாய் கவனிக்கவேண்டியவர்கள் ஆவார்கள்.

தாய்:—ஐயா! ஜில்லாக் கல்விச்சங்கம் மாகாணக் கல்வி, முதலியவற்றை கவனித்து ஒழுங்கு படுத்த தனி மேலதிகாரி எவராவது உண்டா?

உபாத்:—ஆம், அம்மா! கல்வி இலாகா மந்திரி என்று ஒருவர் இருக்கிறார். அவர் அரசியல் திருத்த முறைப்படி அமைந்துள்ள மாகாணச் சட்டசபை மெம்பர்களினின்றும் தெரிந்தெடுக்கப்பட்டவர்.

தாய்:—இவர் ஆலோசனையின்பேரில் தான் கல்வி இலாகா சம்மந்தப்பட்ட சகல காரியங்களும் நடைபெறுகின்றனவோ?

உபாத்:—ஆம். இம்மந்திரி கல்வி இலாகாவில் செய்ய விரும்பும் திருத்தங்களைப்பற்றிச் சட்ட சபையில் பேசி தீர்மானமாக்குவார். பின்னர் அம்முறைப்படி கல்வியை மாகாண முழுதும் பரவச்செய்கின்றவர் ஆவார்.

தாய்:—ஐயா! இத்தகைய கல்வி இலாகா போன்ற பல இலாகா அதிகாரிகளிடத்தும் துரைத்

தனத்தாரிடத்தும் நாம் நன்றியறிதலுடைய வர்களாயிருக்கவேண்டுவது அவசியமல்லவா?

உபாத்:—ஆம், அம்மா! மிகவும் அவசியமே. நன்றியறிதல் உடையவர்களாக விளங்குகின்றோமென்பதை தெரிவிக்கத்தானே பாடசாலைகளில் தினந்தோறும் இராஜவாழ்த்து பாடப்படுகின்றது.

Printed at the
VIVEKANANDA PRESS, MADURA
1929